# தமிழ்நாடும் களப்பிரர் ஆட்சியும்

ஆசிரியர்

இர. பன்னீர்செல்வம் எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச்.டி.

வி. மாணிக்கம் கம்பெனி

32, ஐயப்ப செட்டித் தெரு, சென்னை-1.

முதற்பதிப்பு—1973

©
வி. மாணிக்கம் கம்பெனி, சென்னை—1

விலை ரூ. 2-50

ரவிசங்கர் பிரிண்டர்ஸ், சென்னை 7.

# முகவுரை

தமிழக வரலாற்றில் சங்க காலத்தின் பின்னர் சுமார் 2, 3 நூற்றுண்டுகளை இருண்ட காலம் என்ற பெயரிலேயே வரலாற்றுசிரியர்கள் குறிப்பிட்டு வருகின்றனர். இக்காலப் பகுதியில் களப்பிரர் என்போர் தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்டனர் என்ற குறிப்புக்கள் பல கிடைத்த போதிலும் இவர்கள் யார்? எங்கிருந்து, எவ்வாறு தமிழகப் பகுதியைக் கைப்பற்றினர்? என்ற பல செய்திகள் தெளிவாக்கப் படவில்லை. இதுவரை கிடைத்துள்ள செய்திகளையும், செய்யப்பட்டு வந்துள்ள ஆராய்ச்சிகளையும் துணையாகக் கொண்டு களப்பிரர் வரலாற்றை விளக்குவதே இந்நூலின் நோக்கம்.

சங்கம் - சங்ககாலம் பற்றிய செய்திகளைப் பல தமிழ்ப் பேராசிரியர்களும், வரலாற்றுசிரியர்களும் ஆய்ந்து கூறியுள்ளனர். களப்பிரர் வரலாற்றைப் படிக்கும்போது அவர்களுக்கு முன்புள்ள தமிழகச்செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக, அவர்களின் ஆராய்ச்சிக் கருத்துக்களைச் சுருக்கமாக முற்பகுதி கூறுகின்றது.

இதில் கூறப்படும் செய்திகள் சில திரும்பத் திரும்பச் சொல்லப் பட்டுள்ளன. அவை அந்தந்த இடங்களுக்கு ஏற்ப அமைக்கப் பட்டுள்ளன. அதனுல் அவை கூறியது கூறல் என்ற குற்றத்தின் பாற்படு மெனக் கொள்ளாது அவ்வப் பகுதிகளை விளக்கும் கருவியாகக் கொள்க.

சுமார் நான்கு ஆண்டுகள் முதுகலை வகுப்பு மாணவர்களுக்கு வரலாற்றுப் பாடம் சொல்லி வரும்போது அவர்கள் எழுப்பிய வினுக்களும், நடத்திய விவாதங்களும், இவர்களைப் பற்றி விளக்கமாகக் கூற வேண்டும் என்ற அவர்கள் தம் விருப்பமும் இந்நூல் வெளிவருவதற்கு அடிநிலையாக அமைந்தன.

அவர்கள் தம் வினாக்களுக்கு விடையாகவும், அவர்கள் தம் விருப்பத்தின் நிறைவாகவும் உண்மை காணவேண்டும் என்ற எனது உள்ளத்தின் ஆத்ம திருப்தியாகவும் இந்நூல் அமைந்தது என்றால் மிகையாகாது. அதனால், அவர்களுக்கு நான் மிகவும் நன்றி செலுத்த வேண்டிய நிலையிலுள்ளேன்.

தமிழகத்தின் இருண்ட காலச் சூழ்நிலை எனப் பல்லோராலும் விட்டு விடப்பட்ட ஒரு வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு இந்நூலில் காணும் செய்திகள் ஏதாவது ஒரு வகையில் துணை செய்யுமானால் அதுவே இந்நூல் எழுதியதன் பயனாகும்.

இதனைப் படிக்கும் நண்பர்கள், திறனாய்வாளர்கள் இந்நூலில் காணும் முன்னுக்குப் பின் முரணான செய்திகளைச் சுட்டிக் காட்டிப் புதிய செய்திகள், விளக்கங்கள் இருந்தால் கூறுவார்களாயின் அவற்றை மகிழ்வுடன் ஏற்று வேண்டிய இடங்களில் சேர்த்து இந்நூலினை மேலும் செப்பமுடையதாக்கி அடுத்த பதிப்புக்களை வெளியிட முயல்வேன்.

இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த நண்பர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நான் நன்றிக் கடப்பாடுடையேன். இதன் அச்சுத் திருத்தங்களை உடனிருந்து சரி பார்த்துக் கொடுத்த செல்வி ஏ. வி. ஜோசபின் டோராதிக்கும், இதை நன்முறையில் வெளியிட்ட மாணிக்கம் கம்பெனி நூல்-வெளியீட்டாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை,
2-10-1972.

இர. பன்னீர் செல்வம்.

# மதிப்புரை

திணிந்து பரந்த இருளிடைச் செல்வதறியாது திகைத்து நிற்பவர்க்குக் கையிடை ஒரு விளக்கு அகப்படின் கழிபேருவகை தோன்றுமல்லவா? அத்தகையதோரின்பத்தை அளிக்கின்றது இவ்வரிய நூல். தமிழக வரலாற்றில் களப்பிரர் ஆட்சிக்காலம் ஓர் இருண்ட பகுதியாகும். அப்பகுதியினுள் நுழைந்து ஆய்வு செய்வார்க்கோர் ஒளிவிளக்காய் இந்நூல் நின்று நிலவுகிறது.

களப்பிரர்கள் யார்? அவர்களுடைய ஆட்சிக் காலம் யாது? அவர்களுடைய சமயம் என்ன? அவ்வினம் எவ்வாறு மறைவுற்றது? என்ற வினாக்களுக்கு விடைகாண முயன்றிருக்கிறார் நூலாசிரியர்.

'கல்மேல் எழுத்து' காலத்தை வெல்லும் ஆற்றல் கொண்டது. "நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்துக்கு" நேர் என்பது நற்றமிழ்க் கிழவியின் நயவுரை. காலத்தை வென்று நிற்கும் கல்லெழுத்துகளும், செப்பேடுகளும் ஆசிரியரின் ஆராய்ச்சிக்குத் துணை நின்றுள்ளன.

ஆராய்ச்சி நூலில் கூறப்படும் கருத்துகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளத் தக்க ஒப்ப முடிந்த உண்மைகளாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது; எதிர்பார்ப்பது முறையுமன்று. அவ்வாறு எதிர்பார்த்தால் கருத்து வளர்ச்சி தடைப்பட்டழியும்.

கருத்துகள் மறுக்கப்படலாம். ஆயினும் ஆராய்ச்சிகள் மதிக்கப்படவேண்டும். ஐயம் நிறைந்த பகுதியில் ஆராய்ச்சி வினாக்கள் பலவற்றையெழுப்பி விடைகாண முயலும்போது தான் தெளிவு பிறக்கமுடியும். இந்நூலில் ஆசிரியர் வினாக்கள் பலவற்றை யெழுப்பி விடை காண முயன்றுள்ளார். ஆராய்ச்சியாளர்கள் இதனை ஒட்டியும் வெட்டியும் ஆய்வு

செய்யும்போது கிடைக்கும் கருத்துகள் தமிழ் வரலாற்றுப் பெட்டகத்தில் சேர்க்கப்படும் நன்மணிகளாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய ஆராய்ச்சி நூல்கள் பல்கிப் பெருகி முறையான தமிழ் வரலாறு கிடைக்க வேண்டுமென எண்ணுகின்ற தமிழ் நெஞ்சங்கள் திரு. பன்னீர்செல்வத்தின் இவ்வரிய முயற்சிக்கு வாழ்த்துக் கூறும் என்பது திண்ணம்.

ஆராய்ச்சி நூல்களை வெளிப்படுத்தி அவருடைய தமிழ்த் தொண்டு மேலும் சிறக்க வேண்டுமென நாமும் விழைவோமாக.

அன்புடன்,

சென்னை-14,
25-12-'72.

சிலம்பொலி சு. செல்லப்பன்.

## பதிப்புரை

தமிழ்நாடும் களப்பிரர் ஆட்சியும் என்ற இந்நூல் கையெழுத்துப் படியாகப் பல ஆண்டுகள் என்னிடம் இருந்து வந்தது. அன்று ஆராய்ச்சி மாணவராகவும் எங்கள் ஆசிரியராகவும் பணிபுரிந்து வந்த டாக்டர் திரு. இரா. பன்னீர் செல்வம் அவர்கள், கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் வரலாறும், கல்வெட்டுக்களும் பாடம் நடத்தி வந்த போது எடுத்த குறிப்புக்களை மாணவர்களாக இருந்த எங்களுடன் விவாதித்தும், வேண்டியவற்றைச் சேர்த்தும், விளக்கியும் இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதி வைத்திருந்தார். இதைப் பதிப்பித்தால் மேலும் பலருக்குப்பயன் தருவதாக அமைவதோடு, இதில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களைப் பற்றிய பிறரது எண்ணங்களையும் அறிந்துகொள்ள வாய்ப்பும் ஏற்படும் என்றெண்ணி இதை நூலாகப் பதிப்பிக்கும் விருப்பினை எங்கள் ஆசிரியரிடம் தெரிவித்துக் கொண்டேன். அவரும் மகிழ்வுடன் இசைந்து, வேண்டிய இடங்களைத் திருத்தம் செய்து தந்துதவினார். தமிழ் வளர்ச்சி இயக்கக நிருவாகத் தனி அலுவலர் திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி., அவர்கள் இதற்கு மதிப்புரை தர இசைந்தனர். திரு. கோவிமணிசேகரன் பதிப்பக உதவிகளுக்குத் துணைபுரிந்தார். திரு. வி. மாணிக்கம் அவர்கள், தமது வி. மாணிக்கம் நூல் வெளியீட்டகம் வழியாக இதனை அச்சிட்டு வெளியிட முன்வந்தார்கள். அனைவருக்கும் எனது மனங்கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆராய்ச்சி நூலைத் தமிழ் இலக்கிய வரலாற்றுலகம் வரவேற்கும் என்று நம்புகிறேன்.

சென்னை-21,
1-2-1973.

A. V. ஜோஸபின்

## உள்ளே


**I. ஆதி முச்சங்கம்**
கடைச் சங்கம்
சங்கம் அழிந்தது

**II. வேற்றுப் புலத்தவர் நுழைந்தினர்**
நுழைந்தவர் களப்பிரர்

**III. களப்பிரர் யார்**
களப்பிரர் தாயகம்
தமிழ் இலக்கியங்களில் வடுகர்
களப்பிரரும் முத்தரையரும்
கன்னடக் கல்வெட்டுக்களில் முத்தரையர்

**IV. தமிழ் நாட்டில் களப்பிரர்**
தொண்டை நாட்டில் களப்பிரர்
சோணாட்டில் களப்பிரர்
அச்சுத களப்பாளன்
பாண்டிய நாட்டில் களப்பிரர்

**V. களப்பிரர் கலைகள்**
களப்பிரர் சமயம்
களப்பிரர் அரசியல்
மொழி – இலக்கியம்
சமயக் கல்வி

**VI. களப்பிரர் — சமணம் சீரழிவு**

**VII. பிற்காலத்தில் களப்பிரர்**
கூற்றுவ நாயனார்
மூர்த்தி நாயனார்
சேக்கிழான் பாலறுவாயன் களப்பாளராயர்
களப்பாளராசன் நெற்குன்ற வாணன்
களப்பாளராசன் சாலை
அச்சுத களப்பாளர்

**பிற்சேர்க்கை**
முச்சங்க வரலாறு உணர்த்தும்
ஒரு பழைய பாடல்
வேள்விக்குடிச் செப்பேடுகள்


# I ஆதிமுச்சங்கம்

முச்சங்கங்கள் பண்டு இருந்தனவா ? இல்லையா ? என்று அடிப்படையிலேயே ஒரு கேள்வி அறிஞர் களிடையே இருந்து வருகிறது. சிலர் வள்ளல்களை நாடிச் சென்று பாடிப்பரிசில் பெற்று, பழுமரம் தேரும் பறவை யின் வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கைப் புலவர் கள் அமைதியாக ஓரிடத்தே கூடியிருந்து தமிழாராய்ச்சி செய்தனர் என்பது நம்ப முடியாத ஒன்று என்று வாதிக் கின்றனர்.

வேறு சிலர் மரபுமரபாக வளர்ந்தும் வாழ்ந்தும் வழங்கி வருகின்ற இச்சங்கச் செய்திகள் புறக்கணிக்கத் தக்கதல்ல, அவற்றில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது என்று கூறுகின்றனர். மேலும், இறையனார் களவியலுரையிலும், ஒரு பழம் பாடலிலும் முச்சங்கங் களைக் குறித்து அவ்வளவு விரிவான வரலாறு கூறப் படக் காரணமில்லை. அவை இட்டுக் கட்டிக் கூறப் பட்ட கட்டுக் கதையாக இருக்காது. புலவர் தொகை, ஆண்டுகளின் எண்கள் ஆகியவற்றில் ஒரோ விடங் களில் தவறுகள், மிகைகள் காணப்படினும் சங்கச் செய் திகள் வரலாற்று ஆராய்ச்சிக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ஏனெனில், 'உள்ளதே தோன்றும் இல்ல தற்குத் தோற்ற மின்மையின்' என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் 'தமிழ்ப் புலவர் குழு' இருந்தது என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

ஆனால், அதற்குச் சான்றுகள் எவை ? ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டிக் கூறவந்த இலக்கியப் பாடல்கள் எந்த அளவுக்குச் சங்க ஆராய்ச்சிக்குத் துணையாக நிற்கின்றன ? என்ற ஐயங்கள் எழுகின்றன. அவையனைத்தும் வலியற்ற ஆதாரங்களே. அத்தகைய வலியற்ற ஆதாரங்களைக் கொண்டு சங்க உண்மையை நிறுவின் அதுவும் வலியற்றதாகவன்றோ அமையும். அவற்றை ஈண்டு விளக்கமாக ஆராய்வோம்.

'சங்கம்' என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் 'கூட்டம்' என்ற பொருளில் யாண்டும் பயன்படுத்தப் பெறவில்லை. சங்கம் என்னும் சொல் 'சங்க வருணர் என்னும் நாகரியர்' என்ற புலவரது பெயருடன் வருவது ஒன்றே. இந்தச் சங்க வருணருக்கும் சங்கத்துக்கும் தொடர்பு உண்டா ? அல்லது இந்தப் புலவருக்கும் சமண பௌத்த சங்கங்களுக்கும் தொடர்பு உண்டா ? என்பதெல்லாம் எளிதில் தீர்க்க முடியாத சிக்கல்கள். இவற்றை விடுத்துப் புலவர்கள் அரசருடன் சேர்ந்திருந்த முறையினைச் சற்றே நோக்குவோம்.

அரசனது அவையில் புலவர்கள், அமைச்சர்கள், பாணர்கள், மற்றும் அரசியல் கருமத் தலைவர்கள் எல்லாம் குழுமி இருந்திருக்கின்றனர். அவர்களுள் அவைக்களப் புலவர் எனச் சிறப்புப் பெற்றவர்களும் இருந்திருக்கின்றனர். இவையெல்லாம் அறிந்த செய்திகளே. ஆனால் தமிழ் ஆராய்வதற்கெனத் தனியே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததா ? என்பது கேள்வி.

தொல்காப்பியம், திருக்குறள் எல்லாம் அரங்கேற்றி ஆராயப்பட்டன என்று பாயிரச் செய்திகளால் உணரலாம். எனின், அவ்வரங்கம் என்றது தமிழ்ப் புலவர்கள் கூடியிருந்த தமிழ்ச் சங்கமா ? அன்றி அரசனது அவையா ?



நிலந்தரு திருவன்பாண்டியன் அவையத்து'' தொல்காப்பியம் ஆராயப்பட்டது. ஆனால் இந்த அவை தமிழ் ஆராய்ச்சி செய்யும் அவை யென்று கூறமுடியுமா ? முடியாது. பாண்டியனது நாளோலக்கத்தில் புலவர்களும் அறிஞர்களும் நிரம்பியிருக்க அவையின் கண் அதங்கோட்டு ஆசான் வினா எழுப்ப, அவ்வினாக்களுக்கு ஏற்ற மறுமொழி பகர்ந்து தெளிவு படுத்தத் தொல்காப்பியன் தனது இலக்கணத்தை மேம் படுத்துகின்றான். அரங்கேற்றுதல் என்பதற்கு அறிஞர் பல்லோரிடையில் உயர்ந்து இலங்கச் செய்தல் என்பதே பொருள்.

இவ்வாறு அவையின் கண் பாடலைப் பாடி அரசனை மகிழ்வித்தனர் புலவர்கள். இக்கருத்தினை வலியுறுத்துவதற்குப் பின்வரும் அகப்பாடலடிகள் சான்றாக அமைந்துள்ளன.

*'' வலம் மிகு முன்பின் பாணனொடு மலிதார்த்*
*தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்*
*பாடின் தெண்கிணைப் பாடு......''* (அகம் : 226)

என்ற அடிகள் தித்தன் வெளியானது உறையூர் அரண்மனையில், '' அவன் நாளோலக்கத்தில் வீற்றிருக்கப் பாணனது இனிய தெண்கிணைப் பறையின் ஒலி கேட்பதாகப் புலவர் பாடிச் செல்கின்றார். அஃதன்றி உறந்தையில் புலவர் சங்கத்தின் மத்தியில் தித்தன் வெளியன் உடனிருக்கப் பாணன் வந்து பாடினான் என்று கொள்ள முடியாது.

அஃதை என்பானது நாண் மகிழிருக்கையைப் பாட வந்த பரணர்,

*'' இன்கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு*
*நன்கலன் ஈயும் நாண்மகிழ் இருக்கை*
*அவைபுகு பொருநர் பறையின்......''* (அகம் : 76)

என்று கூறுகின்றார். அஃதை தன் நாளவைக் கண்ணே இருந்து அவைபுகும் பரிசிலர்க்குக் களிறும், கலனும்

ஈயும் தன்மையன் என்பதைச் சுட்டவே பரணர் இவ்வாறு பாடிச் சென்றுள்ளார்.

சோழரது உறையூறைப் பாடவந்த புலவர்கள்,

*" மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து*
*அறம் கெடல் அறியாது..."* (நற் : 400)

என்றும்,

*" மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து*
*அறம் நின்று நிலையிற்று..."* (புறம் : 39)

என்றும்,

*" ஆரங்கண்ணி அடுபோர்ச் சோழர்*
*அறங்கெழு நல்லவை உறந்தை..."* (அகம் : 93)

என்றும் பாடியுள்ளனர். அவனது நாளவையில் அறம் தவருமல் நீதியும் செங்கோன்மையும் நின்று நிலவியது என்பதைக் குறிப்பான் வேண்டியே இவ்வாறு பாடியுள் ளனர். இன்னும்,

*" பாண்முற்றுக நின் நாள்மகிழ் இருக்கை..."*
(புறம் : 29)

என்று உறையூர் முது கண்ணன் சாத்தன் சோழன் நலங் கிள்ளியைப் பாடியுள்ளதும்,

*" நின் நாள் மகிழ் இருக்கை இனிது கண்டிகுமோ "*
(பதிற் : 7 ; 513)

என்று கபிலர் கடுங்கோ வாழியாதனைப் பாடியுள்ளதும்

*" தமிழ் அகப்படுத்த இமிழிசை முரசின்*
*வருநர் வரையாப் பெருநாள் இருக்கைத்*
*தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்*
*பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்*
*கடிமதில் வரைப்பின் ஊணூர்."* (அகம் : 227)



என்று நக்கீரர் பாடியுள்ளதும், நாள்மகிழ் இருக்கை யிலேயே தமிழ்ப் புலவர் வந்தும், இருந்தும், பாடியும் அர சனையும் அரசவையையும் அலங்கரித்தனர் என்பதை விளக்குகின்றன.

எனவே, அரசவைக் கண்ணதாக அனைத்து நிகழ்ச்சி களும் நடைபெற்று நிறைவேறின என்பது தெளிவு. பின்வரும் பாடல் ஒன்றையும் நோக்குவோம்.

*"அறம் அறக் கண்ட நெறிமாண் அவையத்து*
*முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த*
*தூஇயல் கொள்கைத் துகளறு மகளிரொடு*
*பருதி உருவின் பலபடைப் புரிசை*
*எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்*
*வேத வேள்வித் தொழில் முடித்ததூஉம்*
*அறிந்தோன் மன்ற அறிவுடையாளன்"*...... புறம் 224

இதற்குப் பொருள் கூறவந்த உரையாசிரியர், அறத்தைத் தெளிய உணர்ந்த ஒழுக்கம் மாட்சிமைப் பட்ட அந்த ணரது அவைக் களத்தின் கண்ணே வேள்விக்குரிய முறைமையை நன்ருக அறியும் சடங்கவிகள், அம் முறைமையை முன்னின்று காட்டப் பலரானும் புகழப் பட்ட தூயஇயல்பினை உடைத்தாகிய கற்பொழுக்கமாகிய கொள்கையினை உடைய குற்றந் தீர்ந்த குலமகளிரொடு வட்டமாகிய வடிவினையுடைத்தாகிய பலபடையாகச் செய்யப்பட்ட மதிலாற் சூழப்பட்ட வேள்விச் சாலையுள் பருந்து விழுங்குவதாகச் செய்யப்பட்டவிடத்தின் கண் காட்டிய யூபமாகிய நெடிய கம்பத்து வேதத்தாற் சொல் லப்பட்ட வேள்வியினைச் செய்து முடித்ததுவுமாகிய இவற்றுடைய பயனை நிச்சயமாக அறிந்த அறிவினையுடைய (சோழன்) என்று எழுதிச் செல்கின்ருர். இங்கு 'அவை' என்பதற்கு 'அந்தணரது அவை' என்று அவர் பொருள் கூறுகின்ருர்.

சிலர் மதுரைக் காஞ்சியில் மாங்குடிமருதன் பாடிய அடிகளைக் கொண்டு தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதற்கு ஆதாரங் காட்டுவர்.

*'பல்சாலை முதுகுடுமியின்*
*நல்வேள்வித் துறைபோகிய*
*தொல்லாணை நல்லாசிரியர்*
*புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்*
*நிலந்தரு திருவின் நெடியோன் போல'*
(மதுரைக்காஞ்சி 759-763)

என்று வரும் இவ்வடிகளின் மையப் பொருள் முதுகுடுமி வேள்வி செய்தான்—செய்வித்தான்; அவ்வேள்வித்துறை துறைகளின் மரபுகளை அறிந்த நல்லாசிரியர்களாகிய அந்தணர்களுடன் கூடியிருக்கின்ற திருமால்போல (செழியனே நீயும் இருப்பாயாக) என்பதே முதுகுடுமிப் பெருவழுதி இவ்வாறு வேள்வி செய்தலை விரும்பினவன் என்பதும் அதற்குத் தானமாகப் பாகனூர்க் கூற்றத்து ஓரூரை வேள்விக்குடி எனப் பெயரிட்டு வழங்கினான் என்பதும் சாசனத்தால் அறியலாகும் செய்திகள்.

*'கொல்யானை பலஓட்டிக் கூடாமன்னர் குழாம் தவிர்த்த*
*பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டி*
*யாதிராஜனால்*
*நாகமா மலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்*
*பாகனூர்க் கூற்றம் என்னும் பழனக்கிடக்கை*
*நீர்நாட்டுச்*
*சொற்கண்ணாளர் சொலப்பட்ட சுருதி மார்க்கம்*
*பிழையாத*
*கொற்கைகிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி*
*முற்றுவிக்கக்*
*கேள்வி அந்தணாளர் முன்பு நின்று வேள்விகுடி*
*என்று அப்பதியைச்*
*சீரோடு திருவளரச் செய்தார்......'*



என்ற வேள்விக்குடிச் சாசன அடிகள் இக்கருத்தினை வலியுறுத்தும். புறநானூற்றுப் பாடலில் நெட்டிமையார்,

*'நற்பனுவல் நால் வேதத்து*
*அருஞ்சீர்த்திப் பெருக்கண்ணுறை*
*நெய்மலி யாவுதி பொங்கப் பன்மாண்*
*வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி*
*யூபம் நட்ட வியன்களம் பலகொல்*
*யாபல கொல்லோ பெரும ?* (புறம் : 15)

என்று அவனது வேள்விச் சிறப்பினைப் புகழ்ந்து பாடுகின்றார். எனவே, அது வேள்வித் துறைபோகிய நல்லாசிரியர்களான வேள்வி செய்யும் அந்தணர் கூட்டமேயன்றித் தமிழாயும் புலவர் கூட்டமன்று.

இன்னும் சிலர் பாண்டியனது வஞ்சினப் பாடல் பகுதியிலிருந்து சில அடிகளை எடுத்துக் காட்டிச் சங்க உண்மையை நிலை நாட்டுவர்.

*''ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி*
*மாங்குடி மருதன் தலைவனாக*
*உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்*
*புலவர் பாடாது வரைக என் நிலவரை''* (புறம் : 72)

என்று வரும் இவ்வடிகளில் புலவர் கூட்டம் பற்றிய குறிப்பே இல்லை. மாங்குடி மருதன் முதலாய, புகழ் பெற்ற புலவர்கள் என் நாட்டினைப் பாடாது ஒழிவாராக என்ற பொருளைத்தான் கூற முடியுமேயன்றிப் புலவர் கூட்டம் என்றும், அதற்குத் தலைவனாக மாங்குடி மருதன் இருந்தான் என்றும் பொருள் கூறமுடியாது.

வேறு ஒருசாரார் வள்ளுவர் குறளைக் காட்டிப் புலவர் கூடியிருந்தார்கள் என்பதற்குச் சான்று பகர்வர்.

*''உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்''* (குறள் : 394)

இப்பாடலின் கருத்து, கற்ருேர்கள் தம்முள் சேருங் காலத்து மகிழ்வுடன் உறவாடிப் பிரிந்தாலும் தத்தம் நெஞ்சில் ஒவ்வொருவரையும்பற்றிய நினைவு இருக்கப் பிரிவர் என்பதே. இதற்கும், புலவர் குழுவுக்கும் எவ் வகைத் தொடர்பும் இல்லை என்பதை ஓர்ந்துணர்க.

## பட்டிமன்றம்

நாம் கருதி வருகின்ற சங்கமும் இப்பட்டி மன்றமும் ஒன்றல்ல. பட்டிமன்றம் என்பது புலவர்கள் கூடி விவாதங் கள் செய்யும் இடம். அவர்கள் தம்முள் மாறுபட்ட கருத் துக்களைத் தடை விடைகளால் பரிமாறிக் கொள்வதாம். இப்பட்டி மன்றம் பற்றிய குறிப்பு பட்டினப் பாலையில் காணப்படுகிறது. அதில்,

*"பல்கேள்வித் துறைபோகிய*
*தொல்லாணை நல்லாசிரியர்*
*உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடியும்"*
(*பட்டினப்பாலை* : 169-172)

என்று வருகின்றது. பட்டினத்தில் உயர்த்தப் பெற்றி ருக்கின்ற பல்வேறு கொடிகளைப் பற்றிக் குறிப்பிடும் புலவர், விவாதம் குறித்து அதை அறிவிக்கு முகத்தான் உயர்த்தப்பட்ட கொடியைக் கூறுகின்ருர். எனவே, புலவர் பெருமக்கள் சொற்போர் நிகழ்த்தும் இடத்தையும் அந்நிகழ்ச்சி யுண்மையினையும் கொடியெடுத்து அறிவித் திருக்கின்றனர் என்பதை உணரலாம்.

இதைச் 'சங்கம்' என்று கூறமுடியுமா ? எனின், பட்டி மன்றமும், சங்கமும் ஒரு பொருளனவா ? மேலும், இது சோழ நாட்டில் அல்லவா காணப்படுகிறது. எனவே, சங்கம் சோணுட்டிலும் இருந்தது என்று கொள்ள வேண்டும் என்ற பல ஐயங்கள் எழுகின்றன. ஆனல், இவையிரண்டும் வேறு வேறு பொருளில் அமைந்தவை என்பதனைத் தெளிவாக உணரலாம்.



எனவே, 'சங்கம்' என்ற ஒரு அமைப்பு இருந்தது என்று சொல்வதினும், அரசனது நாளோலக்கத்திலேயே புலவர்கள், பாணர்கள், பொருநர்கள், அந்தணர்கள், விறலியர்கள் எல்லோரும் கூடியிருந்தனர் ; அக்காலை அவர்கள் தமிழ்ப் பாடல்களைப் பாடி அரசனை மகிழ்வித் திருக்கவேண்டும்; அவ்வவையிலேயே புதிய நூல் களையும், பாடல்களையும் பற்றிய திறனுய்வு நடந்திருக்க வேண்டும் என்பது ஏற்புடையதாகிறது.

நாளவைத் தமிழாராய்ச்சி, அடுத்தடுத்து அழிவெய் தித்தோன்றி வளர்ந்தது. பின் களப்பிரர் ஆட்சியில் முற்றிலும் அழிந்து, மறக்கப்பட்டது. எஞ்சி நின்ற செவிவழிச் செய்திகளால் அவற்றது உண்மையை உணர்ந்திருக்கவேண்டும். அதுகாலை, சமண-பௌத்த சமயச் சங்கங்களின் செல்வாக்கு மிக்கிருக்க, அதே பெயரில் பழைய தமிழாராய்ச்சி அவையினையும் சங்கம் என்றே பிற்காலத்தார் கூறிப்போந்தனர் என்றலே ஏற்புடைத்து.

எனவே, மாடக்கூடல் என்ற பண்டைய மதுரையில் தமிழாராய்ச்சி செய்ததை முதற்சங்கம் என்றும், அஃதழிந்து ஆட்சி கபாடபுரத்துக்கு மாறிவந்து ஆண்டுத் தமிழாராய்ச்சி தொடரும்போது அதனை இரண்டாம் சங்கம் என்றும், அதுவும் அழிந்து இன்றைய மதுரையில் ஆட்சி ஏற்பட்ட காலத்தில் தொடர்ந்து நடந்த தமிழா ராய்ச்சியினை மூன்ருவது சங்கம் என்றும் கொண்டு செவிவழிச் செய்தியாக முச்சங்க வரலாறு கூறப்பட்டு வருகின்றது என்பது தெளிவாம்.

மேலும், இவ்வரலாற்றினைக் கூறும் பகுதிகள் செவி வழிச் செய்திகள் என்பதற்குச் சான்ருக இருப்பது களவிய லுரையிலும், பழம் பாடலிலும் காணப்படுகின்ற 'என்ப' என்ற சொல்,

'கண்ணகன் பரப்பிற் கபாடபுரம் என்ப' என்றும்,

'...ஆயிரத்து எண்ணூற்றைம்பது வருடம் என்ப' என்றும் வருகின்ற பகுதிகள் இக்கருத்தினை விளக்கும்.

இப்பழம் பாடலின் கருத்தினை ஆழ்ந்து நோக்கும் போது இதை இயற்றிய புலவன் என்ன கருதினன் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

*'ஆதிமுச் சங்கத்து அருந்தமிழ்க் கவிஞர்*
*ஓதிய செய்யுள் உலவாப் பெரும்பொருள்*
*வாளாக் கேட்கும் தோளாச் செவிக்கும்*
*கேட்டுந் தெரியா ஓட்டை நெஞ்சினுக்கும்*
*நுழையா ஆதலின் நுழைபுலன் தன்னொடும்*
*விழைவார்க்கு உரைக்க வேண்டுவர் தெரிந்தே'*

எனவே, பழைய இலக்கிய நூற்களைக் கேட்டும் விளக்கம் அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு மக்களின் அறிவு நிலை தாழ்ந்துவிடுகின்றது. அதனால், உரை இன்றியமையாத ஒன்றாக இதைப் பாடிய புலவருக்குத் தோன்றுகிறது. இப்பாடலின் காலம் உரையாசிரியர்களின் காலம் என்றும் ஒருவாறு கூறமுடியும். தொல்காப்பியத்துக்கு உரையிடையிட்ட விரகன் என்று இவர் கல்லாடனாரைக் குறிப்பிடுகின்றார். ஆனால் பாடிய புலவர், அந்தச் சங்ககாலக் கல்லாடனாரையும் உரையெழுதிய கல்லாடனாரையும் ஒருவராக எண்ணிப் பாடல் புனைந்துவிட்டார் போலும்.

எனவே, சங்க இலக்கியப் பாடல்களைப் படித்த அளவில் எளிதின் விளங்கிக்கொள்ளும் நிலை இல்லாத காலத்தில் இப்பாடல் தோன்றியிருக்கின்றது என்பதும், உரை கூறவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுவிட்டது என்பதும், தெள்ளிதிற் புலனாம்.

இதுகாறும் கூறியவற்றால், இன்று நாம் சங்கம் என்று சொல்வது பண்டு அரசனது நாளவைக் கூட்டமாகவே இருந்துள்ளது என்பதையும், முச்சங்க வரலாறும்



செவிவழிச் செய்தியாகவே சொல்லப்பட்டு வந்துள்ளது என்பதையும், சங்க இலக்கியங்களைப் படித்துப் பொருள் உணரும் திறன் பிற்காலத்தில் போய்விட்டது என்பதையும் அதனால் அவற்றுக்கு உரை வகுக்கவேண்டிய தேவை நேர்ந்தது என்பதையும், இவற்றுக்கெல்லாம் சான்றாக ஒரு பழம் பாடல் உள்ளது என்பதையும் வெள்ளிடைமலையெனத் தெள்ளிதின் உணரலாம்.

### கடைச்சங்கம்

இது காறும் சங்கம் என்ற பெயரில் பண்டைய நாளில் நாளவைக் கூட்டம் நடந்தது என்பதையும், ஆண்டு தமிழ்ப் புலவர்கள், பொருநர்கள், பாணர்கள் முதலியோர் தமிழறிந்தும், ஆய்ந்தும், உணர்ந்தும், உணர்த்தியும் அரசவையை அலங்கரித்தனர் என்பதையும் கண்டோம். இறுதிக் காலத்தில் இச்சங்கத்தின் நிலை எவ்வாறிருந்தது என்பதைக் காண்போம்.

கடைச் சங்கத்தின் கால எல்லை பற்றித் தோன்றிய கொள்கைகள் பல. ஆராய்ச்சியாளர்கள் கி.பி. 2-3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியில் ஒவ்வொன்றைக் கூறிச் சென்றுள்ளனர். அவற்றைப் பிற்பட்ட காலப் பகுதியிலிருந்து முற்பட்ட காலப் பகுதி வரை சென்று சுருக்கமாக ஆராய்வோம்.

**கி. பி. 8ஆம் நூற்றாண்டு**:—இக்காலக் கொள்கையினை வகுத்தவர் திரு. எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளை என்பவர். சிலப்பதிகாரத்தில் காணப்படும்

*''ஆடித்திங்கள் பேரிருள் பக்கத்து*
*அழல்சேர் குட்டத்து அட்டமிஞான்று,*
*வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண*
*உரைசால் மதுரையொடு அரைசு கேடுறும்''*

(சிலம்பு : கட்டுரை காதை 133-136)

என்ற பகுதியிற் கண்டுள்ள, பேரிருட்பக்கம்-கிருட்டின பக்கம் (பௌர்ணமி முதல் அமாவாசை வரையுள்ள காலம்.) அழல் சேர்குட்டம்-கார்த்திகைப் பரணி என்ற உரைக் குறிப்புக்களையும், தமது வானநூல் அறிவையும் பயன்படுத்தி, கண்ணகி மதுரையை எரியூட்டியது கி.பி. 756ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23ஆம் நாள் என்றும், அதனுல் கடைச் சங்க காலமும் அதுவேதான் என்றும் முடிவு கூறுகின்ருர்.

ஆனுல், பிள்ளையவர்கள் அடியார்க்கு நல்லார் கூறும் வானியற் குறிப்புக்கள் தவறுடையன என்றும் கூறுகிருர். அவ்வாருயின் அந்தத் தவருன குறிப்புக் களைக்கொண்டு நேரிதான முடிவைக் கூறுதல் பொருந் துவது யாங்ஙனம்? அதனுல் அவரது முடிவும் ஏற்புடையது அன்று எனக் கருதினர் வேறு சில அறிஞர்கள்.

நாம் கருத்திற் கொள்ளற்குரிய சில செய்திகளில் பின்வருவனவும் முக்கியமானவையாகும். பிள்ளைய வர்கள் கணித்துக் கூறியது சிலப்பதிகாரம் கூறும் வானியற் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டா? அல்லது சிலம்பின் உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் கூறும் உரைப்பகுதியில் காணும் குறிப்புக்களின் துணையைக் கொண்டா? எனவே, மூல நூலால் முடிவாயின் மூல ஆசிரியன் தவருன குறிப்பினைக் கூறு மாறு ஏன்? அன்றி, அது நேரிதாயின் தவருன முடிவு தோன்றக் காரணம் என்ன? இவை போன்ற சில ஐயப் பாடுகளையும் சிந்தித்தல் இவ்வாருன கால ஆராய்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

மேலும், திரு. கே. ஜி. சங்கர ஐயர் கி.பி. ஒன்று முதல் கி.பி. 1400 வரையும் உள்ள கால இடைவெளியில் சிலம்பின் சோதிடக் குறிப்புப் பொருந்தி வரவில்லை என்று கூறுவதையும் கருதுதல் வேண்டும்.

**கி.பி. 7ஆம் நூற்ருண்டுக்கு முற்பட்டது** :—இக்கருத் துக்கு ஆதாரம் திருநாவுக்கரசர் தேவாரம். அப்பர்



பெருமான் வாழ்ந்த காலம் பல்லவன் மகேந்திரவர்மனின் ஆட்சிக் காலம். அதாவது சுமார் கி.பி.600-630. அவர் தமது தேவாரத்தில்,

*'நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கம் ஏறி*
*நற்கனகக்கிழி தருமிக் கருளினேன் காண்'*

என்ற ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்ருர். அதனுல் சங்கமும் இவர் காலத்துக்கு முன்மே இருந்திருத்தல் வேண்டும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதில் காணும் சங்கம், தருமி என்ற சொற்களில் அடங்கியுள்ள கதை வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளதா? புராணக் கதையா? இது எந்த அளவுக்கு உண்மையைக் கூறுகின்றது? இதில் கூறப் படும் சங்கம் முதல், இடை, கடைச் சங்கங்களில் எது? நக்கீரனுடன் இறைவன் வாதாடினுன் எனின் நக்கீரன் காலம் என்ன? தருமி என்ற ஒருவன் இருந்தானு? அவ் வாருயின் அவனது பாடல்கள் ஏதேனும் உண்டா? இந்தக் கதை நிகழ்ச்சி சங்கப் பாடல்களில் உள்ளதா? இதைப் பண்டைய புலவர்கள் குறிப்பிடாதது ஏன்? என்ற பல விஞக்கள் தோன்றுகின்றன. இவற்றுக் கெல்லாம் தெள்ளிதான விடை கண்டாலன்றி ஒரு முடிவைக் கூறுதல் இயலாது. எனினும், ஏழாவது நூற்ருண்டில் 'சங்கம்' என்ற சொல்லாட்சியினைக் காண்கிருேம். அவ்வளவே.

**கி.பி 5 ஆம் நூற்ருண்டு** — இக்கருத்துக்கு அரண் செய்யும் சான்றுகளில் ஒன்ருக அறிஞர்களால் கருதப் படுவது அகநானூற்றில் காணும் 'பாடலி'யின் அழிவு பற்றிய செய்தி.

*'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்*
*சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை*
*நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ'* (அகம்:265)

கங்கைக் கரையிலுள்ள பாடலிபுரம் என்ற நகரானது வெள்ளப் பெருக்கால் அழிவுற்றது. அதன் காலம் 5ஆம் நூற்றுண்டு ஆகும். மற்றொன்று சமுத்திர குப்தனின் தென்னுட்டுப் படையெடுப்பு. அதன் காலமும் கி.பி. 5ஆம் நூற்றுண்டு. இவ்விரண்டு கருத்துடைப் பாடல்களையும் பாடியவர் மாமூலனர் என்ற புலவர். எனவே, சங்க இலக்கியங்களில் பாடல் செய்துள்ள மாமூலனரும் அந்தக் காலத்தைச் சார்ந்தவராவர் சங்கமும் அக்காலமான 5ஆம் நூற்றுண்டாகும் என்ற முடிவினைக் கூறுகின்றனர்.

இவ்வாறுன கருத்துத் தோன்றுவதற்குக் காரணம் 'பாடலி'யின் பொருள் மயக்கமேயாகும். மேலும் நந்தர் என்று வருகின்ற சொல் நந்தர் குலத்தைக் குறிப்பது. நந்த வம்சம் மோரியருக்கு முற்பட்டது. நந்தர் தம் இறுதி அரசன் மகாபத்ம நந்தன். இவன் கி.மு.371இல் வாழ்ந்தவன். எனவே, நந்தரைப் பற்றிப் பாடிய மாமூலனரும் கி.மு. நான்காம் நூற்றுண்டினராகல் வேண்டும். ஆனுல் இது ஏற்புடைய கருத்து ஆகாது.

மோரியர் காலம் சந்திரகுப்த மௌரியன் காலத்தில் துவங்குகின்றது. கடைசி நந்தனை அழித்து விட்டுக் கி.மு. 322இல் அரியணை ஏறுகிருன் சந்திரகுப்தன்.

இனிக் குப்தர் காலம் மௌரியர் காலத்துக்குச் சுமார் 500 ஆண்டுகளுக்குப் பிற்பட்டுத் துவங்குகிறது. அதன் முதல் அரசன் சந்திரகுப்தன். இவன் கி.பி. 319 இல் முடி சூடுகிருன். இவனுக்குப்பின் சமுத்திர குப்தன் ஆட்சிக்கு வருகின்றுன். இவன் கி.பி. 336 முதல் கி.பி. 380வரை அரசோச்சுகிருன். தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்து காஞ்சியில் விஷ்ணு கோபப் பல்லவனையும், கேரளத்தில் ஒரு தலைவனையும் வென்றவன் இவனே. இது, கி.பி. 4ஆம் நூற்றுண்டில் நிகழ்கின்றது.



இவ்வரலாற்றுப் போர் நிகழ்ச்சியினை சங்கப் புலவர்களில் ஒருவர்தான் அறிந்திருக்கக் கூடுமா? வரலாற்றுப் புலவர் என்று கருதப்படும், சேரன் புகழ் பாடிய பரணர் சேர நாட்டின் மீது வடபுலத்தரசன் படையெடுத்து வந்து வென்ற செய்தியினைக் குறிப்பிடாதிருப்பாரா? மேலும், இப் படையெடுப்பு நான்காம் நூற்றுண்டின் மத்தியில் நடக்க ஐந்தாம் நூற்றுண்டினைச் சார்ந்தவராக மாமூலனரைக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? இவ்வாறுன சிக்கல்கள் இக்காலப் பகுதியைக் குறிப்பிடும்போது எழுகின்றன.

**கி.பி. 2ஆம் நூற்றுண்டு:**—இதற்கு ஆதாரமாக இருப்பது சிலப்பதிகாரச் செய்திகளே. சேரன் செங்குட்டுவன் கண்ணகி வழிபாடு செய்கின்றுன். அதற்கு ஈழத்து வேந்தன் முதலாம் கயவாகு வந்திருக்கின்றுன் என்பதனை,

> *"கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்*
> *எந்நாட்டு ஆங்கண் இமைய வரம்பனின்*
> *நன்னுள் செய்த நாளணி வேள்வியில்*
> *வந்து ஈக என்றே வணங்கினர் வேண்ட"*

*(சிலம்பு:வரந்தருகாதை 160-163)*

என்னும் பகுதியால் அறிகிறோம், இவன் காலம் கி.பி. 171 முதல் 193 வரையாகும். இரண்டாம் கயவாகு மன்னன் கி.பி. 12ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவன். எனவே, முதலாம் கயவாகுவின் காலத்தை ஒட்டித்தான் சிலப்பதிகாரம் தோன்றியிருக்க வேண்டும். அதையொட்டிச் சங்கமும் இருந்திருக்க வேண்டும். கண்ணகி மதுரை மாநகரை எரியூட்டச் சங்கமும் அழிந்திருக்க வேண்டும். ஆகவே கி.பி. 2ஆம் நூற்றுண்டாகலாம் என்று முடிவு செய்துள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் தொண்டை நாட்டைக் கைப்பற்றிக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு

ஆண்டவர்கள் பல்லவ வம்சத்தினர். ஆனால் அவர்களைப் பற்றிய செய்திகள் எதுவும் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. எனவே, பல்லவரது காலத்துக்கு முன்பே சங்கம் அழிந்து பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும். இளந்திரையன் என்ற முதற்பல்லவத் தமிழ் மன்னன் தொண்டை நாட்டைக் கைப்பற்றிச் செல்வாக்குப் பெறுகின்ற காலச் சூழ்நிலையில் சங்கம் அழிவெய்தத் துவங்குகிறது. புலவர்கள் சிதறுண்டு போகின்றனர். நாட்டில் குழப்ப நிலை வளர ஆரம்பிக்கின்றது.

பட்டினப்பாலை குறிக்கும் கரிகாலனும், பெரும்பாணாற்றுப்படை புகழும் திரையனும் ஒரு காலத்தவர் என்பதை அவ்விருவரையும் உருத்திரங் கண்ணன் பாடிய பாடலைக் கொண்டு உணரலாம். தொண்டை மானிளந் திரையனும், அதியமான் நெடுமானஞ்சியும் சமகாலத்தவர் என்பதை,

*'இவ்வே, பீலியணிந்து மாலை சூட்டிக்*
*கண்டிர ணோன் காழ் திருத்தி நெய்யணிந்து*
*கடியுடை வியனக ரவ்வே, யவ்வே*
*பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து*
*கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்*
*உண்டாயிற் பதங்கொடுத்து*
*இல்லாயி னுடனுண்ணும்*
*இல்லோ ரொக்கல் தலைவன்*
*அண்ணல் எம்கோமான் வைந்நுதி வேலே.'* (புறம் : 95)

என்ற ஔவையாரின் தூதுப் பாடலின் செய்தியால் அறியலாம். இவர்கள் எல்லாம் கடைச்சங்க அழிவுக்குப் பின்னர் வாழ்ந்தவர்களாவர்.

எனவே, கி. பி. 2-ஆம் நூற்றாண்டுப் பகுதிகளில் கடைச்சங்கம் அழிவு பட்டிருத்தல் வேண்டும். அதுவரையில் சங்கம் இருந்திருக்க வேண்டும் என்பது திண்ணம்.

# I ஆதிமுச்சங்கம்

முச்சங்கங்கள் பண்டு இருந்தனவா ? இல்லையா ? என்று அடிப்படையிலேயே ஒரு கேள்வி அறிஞர்களிடையே இருந்து வருகிறது. சிலர் வள்ளல்களை நாடிச் சென்று பாடிப்பரிசில் பெற்று, பழுமரம் தேரும் பறவையின் வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கைப் புலவர்கள் அமைதியாக ஓரிடத்தே கூடியிருந்து தமிழாராய்ச்சி செய்தனர் என்பது நம்ப முடியாத ஒன்று என்று வாதிக்கின்றனர்.

வேறு சிலர் மரபுமரபாக வளர்ந்தும் வாழ்ந்தும் வழங்கி வருகின்ற இச்சங்கச் செய்திகள் புறக்கணிக்கத் தக்கதல்ல, அவற்றில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது என்று கூறுகின்றனர். மேலும், இறையனார் களவியலுரையிலும், ஒரு பழம் பாடலிலும் முச்சங்கங்களைக் குறித்து அவ்வளவு விரிவான வரலாறு கூறப்படக் காரணமில்லை. அவை இட்டுக் கட்டிக் கூறப்பட்ட கட்டுக் கதையாக இருக்காது. புலவர் தொகை, ஆண்டுகளின் எண்கள் ஆகியவற்றில் ஒரோ விடங்களில் தவறுகள், மிகைகள் காணப்படினும் சங்கச் செய்திகள் வரலாற்று ஆராய்ச்சிக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ஏனெனில், 'உள்ளதே தோன்றும் இல்லதற்குத் தோற்ற மின்மையின்' என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் 'தமிழ்ப் புலவர் குழு' இருந்தது என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

ஆனால், அதற்குச் சான்றுகள் எவை? ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டிக் கூறவந்த இலக்கியப் பாடல்கள் எந்த அளவுக்குச் சங்க ஆராய்ச்சிக்குத் துணையாக நிற்கின்றன? என்ற ஐயங்கள் எழுகின்றன. அவையனைத்தும் வலியற்ற ஆதாரங்களே. அத்தகைய வலியற்ற ஆதாரங்களைக் கொண்டு சங்க உண்மையை நிறுவின் அதுவும் வலியற்றதாகவன்றோ அமையும். அவற்றை ஈண்டு விளக்கமாக ஆராய்வோம்.

'சங்கம்' என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் 'கூட்டம்' என்ற பொருளில் யாண்டும் பயன்படுத்தப் பெறவில்லை. சங்கம் என்னும் சொல் 'சங்க வருணர் என்னும் நாகரியர்' என்ற புலவரது பெயருடன் வருவது ஒன்றே. இந்தச் சங்க வருணருக்கும் சங்கத்துக்கும் தொடர்பு உண்டா? அல்லது இந்தப் புலவருக்கும் சமண பௌத்த சங்கங்களுக்கும் தொடர்பு உண்டா? என்பதெல்லாம் எளிதில் தீர்க்க முடியாத சிக்கல்கள். இவற்றை விடுத்துப் புலவர்கள் அரசருடன் சேர்ந்திருந்த முறையினைச் சற்றே நோக்குவோம்.

அரசனது அவையில் புலவர்கள், அமைச்சர்கள், பாணர்கள், மற்றும் அரசியல் கருமத் தலைவர்கள் எல்லாம் குழுமி இருந்திருக்கின்றனர். அவர்களுள் அவைக்களப் புலவர் எனச் சிறப்புப் பெற்றவர்களும் இருந்திருக்கின்றனர். இவையெல்லாம் அறிந்த செய்திகளே. ஆனால் தமிழ் ஆராய்வதற்கெனத் தனியே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததா? என்பது கேள்வி.

தொல்காப்பியம், திருக்குறள் எல்லாம் அரங்கேற்றி ஆராயப்பட்டன என்று பாயிரச் செய்திகளால் உணரலாம். எனின், அவ்வரங்கம் என்றது தமிழ்ப் புலவர்கள் கூடியிருந்த தமிழ்ச் சங்கமா? அன்றி அரசனது அவையா?



"நிலந்தருதிருவின்பாண்டியன் அவையத்து" தொல்காப்பியம் ஆராயப்பட்டது. ஆனால் இந்த அவை தமிழ் ஆராய்ச்சி செய்யும் அவை யென்று கூறமுடியுமா? முடியாது. பாண்டியனது நாளோலக்கத்தில் புலவர்களும் அறிஞர்களும் நிரம்பியிருக்க அவையின் கண் அதங்கோட்டு ஆசான் வினா எழுப்ப, அவ்வினாக்களுக்கு ஏற்ற மறுமொழி பகர்ந்து தெளிவு படுத்தத் தொல்காப்பியன் தனது இலக்கணத்தை மேம் படுத்துகின்றான். அரங்கேற்றுதல் என்பதற்கு அறிஞர் பல்லோரிடையில் உயர்ந்து இலங்கச் செய்தல் என்பதே பொருள்.

இவ்வாறு அவையின் கண் பாடலைப் பாடி அரசனை மகிழ்வித்தனர் புலவர்கள். இக்கருத்தினை வலியுறுத்துவதற்குப் பின்வரும் அகப்பாடலடிகள் சான்றாக அமைந்துள்ளன.

*" வலம் மிகு முன்பின் பாணனொடு மலிதார்த்*
*தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்*
*பாடின் தெண்கிணைப் பாடு......"* (அகம் : 226)

என்ற அடிகள் தித்தன் வெளியானது உறையூர் அரண்மனையில், அவன் நாளோலக்கத்தில் வீற்றிருக்கப் பாணனது இனிய தெண்கிணைப் பறையின் ஒலி கேட்பதாகப் புலவர் பாடிச் செல்கின்றார். அஃதன்றி உறந்தையில் புலவர் சங்கத்தின் மத்தியில் தித்தன் வெளியன் உடனிருக்கப் பாணன் வந்து பாடினான் என்று கொள்ள முடியாது.

அஃதை என்பானது நாண் மகிழிருக்கையைப் பாட வந்த பரணர்,

*" இன்கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு*
*நன்கலன் ஈயும் நாண்மகிழ் இருக்கை*
*அவைபுகு பொருநர் பறையின்......"* (அகம் : 76)

என்று கூறுகின்றார். அஃதை தன் நாளவைக் கண்ணே இருந்து அவைபுகும் பரிசிலர்க்குக் களிறும், கலனும்

ஈயும் தன்மையன் என்பதைச் சுட்டவே பரணர் இவ்வாறு பாடிச் சென்றுள்ளார்.

சோழரது உறையூறைப் பாடவந்த புலவர்கள்,

*" மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து*
*அறம் கெடல் அறியாது..."* (நற் : 400)

என்றும்,

*" மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து*
*அறம் நின்று நிலையிற்று..."* (புறம் ; 39)

என்றும்,

*" ஆரங்கண்ணி அடுபோர்ச் சோழர்*
*அறங்கெழு நல்லவை உறந்தை..."* (அகம் ; 93)

என்றும் பாடியுள்ளனர். அவனது நாளவையில் அறம் தவருமல் நீதியும் செங்கோன்மையும் நின்று நிலவியது என்பதைக் குறிப்பான் வேண்டியே இவ்வாறு பாடியுள் ளனர். இன்னும்,

*" பாண்முற்றுக நின் நாள்மகிழ் இருக்கை..."*
(புறம் : 29)

என்று உறையூர் முது கண்ணன் சாத்தன் சோழன் நலங் கிள்ளியைப் பாடியுள்ளதும்,

*" நின் நாள் மகிழ் இருக்கை இனிது கண்டிகுமோ "*
(பதிற் : 7 : 513)

என்று கபிலர் கடுங்கோ வாழியாதனைப் பாடியுள்ளதும்

*" தமிழ் அகப்படுத்த இமிழிசை முரசின்*
*வருநர் வரையாப் பெருநாள் இருக்கைத்*
*தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்*
*பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்*
*கடிமதில் வரைப்பின் ஊணூரர்."* (அகம் : 227)



என்று நக்கீரர் பாடியுள்ளதும், நாள்மகிழ் இருக்கை யிலேயே தமிழ்ப் புலவர் வந்தும், இருந்தும், பாடியும் அர சனையும் அரசவையையும் அலங்கரித்தனர் என்பதை விளக்குகின்றன.

எனவே, அரசவைக் கண்ணதாக அனைத்து நிகழ்ச்சி களும் நடைபெற்று நிறைவேறின என்பது தெளிவு. பின்வரும் பாடல் ஒன்றையும் நோக்குவோம்.

*"அறம் அறக் கண்ட நெறிமாண் அவையத்து*
*முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த*
*தூஇயல் கொள்கைத் துகளறு மகளிரொடு*
*பருதி உருவின் பலபடைப் புரிசை*
*எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்*
*வேத வேள்வித் தொழில் முடித்ததூஉம்*
*அறிந்தோன் மன்ற அறிவுடையாளன்"......* புறம் 224

இதற்குப் பொருள் கூறவந்த உரையாசிரியர், அறத்தைத் தெளிய உணர்ந்த ஒழுக்கம் மாட்சிமைப் பட்ட அந்த ணரது அவைக் களத்தின் கண்ணே வேள்விக்குரிய முறைமையை நன்றாக அறியும் சடங்கவிகள், அம் முறைமையை முன்னின்று காட்டப் பலரானும் புகழப் பட்ட தூயஇயல்பினை உடைத்தாகிய கற்பொழுக்கமாகிய கொள்கையினை உடைய குற்றந் தீர்ந்த குலமகளிரொடு வட்டமாகிய வடிவினையுடைத்தாகிய பலபடையாகச் செய்யப்பட்ட மதிலாற் சூழப்பட்ட வேள்விச் சாலையுள் பருந்து விழுங்குவதாகச் செய்யப்பட்டவிடத்தின் கண் காட்டிய யூபமாகிய நெடிய கம்பத்து வேதத்தாற் சொல் லப்பட்ட வேள்வியினைச் செய்து முடித்ததுவுமாகிய இவற்றுடைய பயனை நிச்சயமாக அறிந்த அறிவினையுடைய (சோழன்) என்று எழுதிச் செல்கின்றார். இங்கு 'அவை' என்பதற்கு 'அந்தணரது அவை' என்று அவர் பொருள் கூறுகின்றார்.

சிலர் மதுரைக் காஞ்சியில் மாங்குடிமருதன் பாடிய அடிகளைக் கொண்டு தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதற்கு ஆதாரங் காட்டுவர்.

*'பல்சாலை முதுகுடுமியின்*
*நல்வேள்வித் துறைபோகிய*
*தொல்லாணை நல்லாசிரியர்*
*புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்*
*நிலந்தரு திருவின் நெடியோன் போல'*

(மதுரைக்காஞ்சி 759-763)

என்று வரும் இவ்வடிகளின் மையப் பொருள் முதுகுடுமி வேள்வி செய்தான்—செய்வித்தான்; அவ்வேள்வித்துறை துறைகளின் மரபுகளை அறிந்த நல்லாசிரியர்களாகிய அந்தணர்களுடன் கூடியிருக்கின்ற திருமால்போல (செழியனே நீயும் இருப்பாயாக) என்பதே முதுகுடுமிப் பெருவழுதி இவ்வாறு வேள்வி செய்தலை விரும்பினவன் என்பதும் அதற்குத் தானமாகப் பாகனூர்க் கூற்றத்து ஓரூரை வேள்விக்குடி எனப் பெயரிட்டு வழங்கினான் என்பதும் சாசனத்தால் அறியலாகும் செய்திகள்.

*'கொல்யானை பலஓட்டிக் கூடாமன்னர் குழாம் தவிர்த்த*
*பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டி யாதிராஜனால்*
*நாகமா மலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்*
*பாகனூர்க் கூற்றம் என்னும் பழனக்கிடக்கை நீர்நாட்டுச்*
*சொற்கண்ணாளர் சொலப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாத*
*கொற்கைகிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்கக்*
*கேள்வி அந்தணாளர் முன்பு நின்று வேள்விகுடி என்று அப்பதியைச்*
*சீரோடு திருவளரச் செய்தார்......'*



என்ற வேள்விக்குடிச் சாசன அடிகள் இக்கருத்தினை வலியுறுத்தும். புறநானூற்றுப் பாடலில் நெட்டிமையார்,

*'நற்பனுவல் நால் வேதத்து*
*அருஞ்சீர்த்திப் பெருக்கண்ணுறை*
*நெம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்*
*வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி*
*யூபம் நட்ட வியன்களம் பலகொல்*
*யாபல கொல்லோ பெரும ?* (புறம் : 15)

என்று அவனது வேள்விச் சிறப்பினைப் புகழ்ந்து பாடுகின்றார். எனவே, அது வேள்வித் துறைபோகிய நல்லாசிரியர்களான வேள்வி செய்யும் அந்தணர் கூட்டமேயன்றித் தமிழாயும் புலவர் கூட்டமன்று.

இன்னும் சிலர் பாண்டியனது வஞ்சினப் பாடல் பகுதியிலிருந்து சில அடிகளை எடுத்துக் காட்டிச் சங்க உண்மையை நிலை நாட்டுவர்.

*"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி*
*மாங்குடி மருதன் தலைவனாக*
*உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்*
*புலவர் பாடாது வரைக என் நிலவரை"* (புறம் : 72)

என்று வரும் இவ்வடிகளில் புலவர் கூட்டம் பற்றிய குறிப்பே இல்லை. மாங்குடி மருதன் முதலாய, புகழ் பெற்ற புலவர்கள் என் நாட்டினைப் பாடாது ஒழிவாராக என்ற பொருளைத்தான் கூற முடியுமேயன்றிப் புலவர் கூட்டம் என்றும், அதற்குத் தலைவனாக மாங்குடி மருதன் இருந்தான் என்றும் பொருள் கூறமுடியாது.

வேறு ஒருசாரார் வள்ளுவர் குறளைக் காட்டிப் புலவர் கூடியிருந்தார்கள் என்பதற்குச் சான்று பகர்வர்.

*"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்"* (குறள் : 394)

இப்பாடலின் கருத்து, கற்றோர்கள் தம்முள் சேருங் காலத்து மகிழ்வுடன் உறவாடிப் பிரிந்தாலும் தத்தம் நெஞ்சில் ஒவ்வொருவரையும்பற்றிய நினைவு இருக்கப் பிரிவர் என்பதே. இதற்கும், புலவர் குழுவுக்கும் எவ் வகைத் தொடர்பும் இல்லை என்பதை ஓர்ந்துணர்க.

## பட்டிமன்றம்

நாம் கருதி வருகின்ற சங்கமும் இப்பட்டி மன்றமும் ஒன்றல்ல. பட்டிமன்றம் என்பது புலவர்கள் கூடி விவாதங் கள் செய்யும் இடம். அவர்கள் தம்முள் மாறுபட்ட கருத் துக்களைத் தடை விடைகளால் பரிமாறிக் கொள்வதாம். இப்பட்டி மன்றம் பற்றிய குறிப்பு பட்டினப் பாலையில் காணப்படுகிறது. அதில்,

*''பல்கேள்வித் துறைபோகிய*
*தொல்லாணை நல்லாசிரியர்*
*உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடியும்''*
(பட்டினப்பாலை : 169-172)

என்று வருகின்றது. பட்டினத்தில் உயர்த்தப் பெற்றி ருக்கின்ற பல்வேறு கொடிகளைப் பற்றிக் குறிப்பிடும் புலவர், விவாதம் குறித்து அதை அறிவிக்கு முகத்தான் உயர்த்தப்பட்ட கொடியைக் கூறுகின்றார். எனவே, புலவர் பெருமக்கள் சொற்போர் நிகழ்த்தும் இடத்தையும் அந்நிகழ்ச்சியுண்மையினையும் கொடியெடுத்து அறிவித் திருக்கின்றனர் என்பதை உணரலாம்.

இதைச் 'சங்கம்' என்று கூறமுடியுமா ? எனின், பட்டி மன்றமும், சங்கமும் ஒரு பொருளனவா ? மேலும், இது சோழ நாட்டில் அல்லவா காணப்படுகிறது. எனவே, சங்கம் சோணாட்டிலும் இருந்தது என்று கொள்ள வேண்டும் என்ற பல ஐயங்கள் எழுகின்றன. ஆனால், இவையிரண்டும் வேறு வேறு பொருளில் அமைந்தவை என்பதனைத் தெளிவாக உணரலாம்.



எனவே, 'சங்கம்' என்ற ஒரு அமைப்பு இருந்தது என்று சொல்வதினும், அரசனது நாளோலக்கத்திலேயே புலவர்கள், பாணர்கள், பொருநர்கள், அந்தணர்கள், விறலியர்கள் எல்லோரும் கூடியிருந்தனர் ; அக்காலை அவர்கள் தமிழ்ப் பாடல்களைப் பாடி அரசனை மகிழ்வித் திருக்கவேண்டும்; அவ்வவையிலேயே புதிய நூல் களையும், பாடல்களையும் பற்றிய திறனாய்வு நடந்திருக்க வேண்டும் என்பது ஏற்புடையதாகிறது.

நாளவைத் தமிழாராய்ச்சி, அடுத்தடுத்து அழிவெய் தித்தோன்றி வளர்ந்தது. பின் களப்பிரர் ஆட்சியில் முற்றிலும் அழிந்து, மறக்கப்பட்டது. எஞ்சி நின்ற செவிவழிச் செய்திகளால் அவற்றது உண்மையை உணர்ந்திருக்கவேண்டும். அதுகாலை, சமண-பௌத்த சமயச் சங்கங்களின் செல்வாக்கு மிக்கிருக்க, அதே பெயரில் பழைய தமிழாராய்ச்சி அவையினையும் சங்கம் என்றே பிற்காலத்தார் கூறிப்போந்தனர் என்றலே ஏற்புடைத்து.

எனவே, மாடக்கூடல் என்ற பண்டைய மதுரையில் தமிழாராய்ச்சி செய்ததை முதற்சங்கம் என்றும், அஃதழிந்து ஆட்சி கபாடபுரத்துக்கு மாறிவந்து ஆண்டுத் தமிழாராய்ச்சி தொடரும்போது அதனை இரண்டாம் சங்கம் என்றும், அதுவும் அழிந்து இன்றைய மதுரையில் ஆட்சி ஏற்பட்ட காலத்தில் தொடர்ந்து நடந்த தமிழா ராய்ச்சியினை மூன்றாவது சங்கம் என்றும் கொண்டு செவிவழிச் செய்தியாக முச்சங்க வரலாறு கூறப்பட்டு வருகின்றது என்பது தெளிவாம்.

மேலும், இவ்வரலாற்றினைக் கூறும் பகுதிகள் செவி வழிச் செய்திகள் என்பதற்குச் சான்றாக இருப்பது களவிய லுரையிலும், பழம் பாடலிலும் காணப்படுகின்ற 'என்ப' என்ற சொல்,

**'கண்ணகன் பரப்பிற் கபாடபுரம் என்ப'** என்றும்,

'...ஆயிரத்து எண்ணூற்றைம்பது வருடம் என்ப' என்றும் வருகின்ற பகுதிகள் இக்கருத்தினை விளக்கும்.

இப்பழம் பாடலின் கருத்தினை ஆழ்ந்து நோக்கும் போது இதை இயற்றிய புலவன் என்ன கருதினுன் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

*'ஆதிமுச் சங்கத்து அருந்தமிழ்க் கவிஞர்*
*ஓதிய செய்யுள் உலவாப் பெரும்பொருள்*
*வாளாக் கேட்கும் தோளாச் செவிக்கும்*
*கேட்டுந் தெரியா ஓட்டை நெஞ்சினுக்கும்*
*நுழையா ஆதலின் நுழைபுலன் தன்னெடும்*
*விழைவார்க்கு உரைக்க வேண்டுவர் தெரிந்தே'*

எனவே, பழைய இலக்கிய நூற்களைக் கேட்டும் விளக்கம் அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு மக்களின் அறிவு நிலை தாழ்ந்துவிடுகின்றது. அதனுல், உரை இன்றி யமையாத ஒன்ருக இதைப் பாடிய புலவருக்குத் தோன்று கிறது. இப்பாடலின் காலம் உரையாசிரியர்களின் காலம் என்றும் ஒருவாறு கூறமுடியும். தொல்காப்பியத்துக்கு உரையிடையிட்ட விரகன் என்று இவர் கல்லாடனுரைக் குறிப்பிடுகின்ருர். ஆனுல் பாடிய புலவர், அந்தச் சங்ககாலக் கல்லாடனுரையும் உரையெழுதிய கல்லாட னுரையும் ஒருவராக எண்ணிப் பாடல் புனைந்துவிட்டார் போலும்.

எனவே, சங்க இலக்கியப் பாடல்களைப் படித்த அளவில் எளிதின் விளங்கிக்கொள்ளும் நிலை இல்லாத காலத்தில் இப்பாடல் தோன்றியிருக்கின்றது என்பதும், உரை கூறவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டு விட்டது என்பதும், தெள்ளிதிற் புலனும்.

இதுகாறும் கூறியவற்ருல், இன்று நாம் சங்கம் என்று சொல்வது பண்டு அரசனது நாளவைக் கூட்ட மாகவே இருந்துள்ளது என்பதையும், முச்சங்க வரலாறும் செவிவழிச் செய்தியாகவே சொல்லப்பட்டு வந்துள்ளது என்பதையும், சங்க இலக்கியங்களைப் படித்துப் பொருள் உணரும் திறன் பிற்காலத்தில் போய்விட்டது என்பதை யும் அதனுல் அவற்றுக்கு உரை வகுக்கவேண்டிய தேவை நேர்ந்தது என்பதையும், இவற்றுக்கெல்லாம் சான்ருக ஒரு பழம் பாடல் உள்ளது என்பதையும் வெள்ளிடைமலையெனத் தெள்ளிதின் உணரலாம்.



### கடைச்சங்கம்

இது காறும் சங்கம் என்ற பெயரில் பண்டைய நாளில் நாளவைக் கூட்டம் நடந்தது என்பதையும், ஆண்டு தமிழ்ப் புலவர்கள், பொருநர்கள், பாணர்கள் முதலியோர் தமிழறிந்தும், ஆய்ந்தும், உணர்ந்தும், உணர்த்தியும் அரசவையை அலங்கரித்தனர் என்பதையும் கண்டோம். இறுதிக் காலத்தில் இச்சங்கத்தின் நிலை எவ்வாறிருந்தது என்பதைக் காண்போம்.

கடைச் சங்கத்தின் கால எல்லை பற்றித் தோன்றிய கொள்கைகள் பல. ஆராய்ச்சியாளர்கள் கி.பி. 2-3ஆம் நூற்ருண்டு முதல் கி.பி. 8ஆம் நூற்ருண்டு வரையுள்ள காலப் பகுதியில் ஒவ்வொன்றைக் கூறிச் சென்றுள் ளனர். அவற்றைப் பிற்பட்ட காலப் பகுதியிலிருந்து முற்பட்ட காலப் பகுதி வரை சென்று சுருக்கமாக ஆராய்வோம்.

**கி. பி. 8ஆம் நூற்ருண்டு:**—இக்காலக் கொள்கையினை வகுத்தவர் திரு. எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளை என்பவர். சிலப்பதிகாரத்தில் காணப்படும்

*"ஆடித்திங்கள் பேரிருள் பக்கத்து*
*அழல்சேர் குட்டத்து அட்டமிஞான்று,*
*வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண*
*உரைசால் மதுரையொடு அரைசு கேடுறும்"*

(சிலம்பு : கட்டுரை காதை 133-136)

என்ற பகுதியிற் கண்டுள்ள, பேரிருட்பக்கம்-கிருட்டின பக்கம் (பௌர்ணமி முதல் அமாவாசை வரையுள்ள காலம்.) அழல் சேர்குட்டம்-கார்த்திகைப் பரணி என்ற உரைக் குறிப்புக்களையும், தமது வானநூல் அறிவையும் பயன்படுத்தி, கண்ணகி மதுரையை எரியூட்டியது கி.பி. 756ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23ஆம் நாள் என்றும், அதனால் கடைச் சங்க காலமும் அதுவேதான் என்றும் முடிவு கூறுகின்றார்.

ஆனால், பிள்ளையவர்கள் அடியார்க்கு நல்லார் கூறும் வானியற் குறிப்புக்கள் தவறுடையன என்றும் கூறுகிறார். அவ்வாறாயின் அந்தத் தவறான குறிப்புக் களைக்கொண்டு நேரிதான முடிவைக் கூறுதல் பொருந் துவது யாங்ஙனம்? அதனால் அவரது முடிவும் ஏற்புடையது அன்று எனக் கருதினர் வேறு சில அறிஞர்கள்.

நாம் கருத்திற் கொள்ளற்குரிய சில செய்திகளில் பின்வருவனவும் முக்கியமானவையாகும். பிள்ளை வர்கள் கணித்துக் கூறியது சிலப்பதிகாரம் கூறும் வானியற் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டா? அல்லது சிலம்பின் உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் கூறும் உரைப்பகுதியில் காணும் குறிப்புக்களின் துணையைக் கொண்டா? எனவே, மூல நூலால் முடிவாயின் மூல ஆசிரியன் தவறான குறிப்பினைக் கூறு மாறு ஏன்? அன்றி, அது நேரிதாயின் தவறான முடிவு தோன்றக் காரணம் என்ன? இவை போன்ற சில ஐயப் பாடுகளையும் சிந்தித்தல் இவ்வாறான கால ஆராய்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

மேலும், திரு. கே. ஜி. சங்கர ஐயர் கி.பி. ஒன்று முதல் கி.பி. 1400 வரையும் உள்ள கால இடைவெளியில் சிலம்பின் சோதிடக் குறிப்புப் பொருந்தி வரவில்லை என்று கூறுவதையும் கருதுதல் வேண்டும்.

**கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது** :—இக்கருத் துக்கு ஆதாரம் திருநாவுக்கரசர் தேவாரம். அப்பர்



பெருமான் வாழ்ந்த காலம் பல்லவன் மகேந்திரவர்மனின் ஆட்சிக் காலம். அதாவது சுமார் கி.பி.600-630. அவர் தமது தேவாரத்தில்,

*'நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கம் ஏறி*
*நற்கனகக்கிழி தருமிக் கருளினேன் காண்'*

என்ற ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றார். அதனால் சங்கமும் இவர் காலத்துக்கு முன்மே இருந்திருத்தல் வேண்டும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதில் காணும் சங்கம், தருமி என்ற சொற்களில் அடங்கியுள்ள கதை வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளதா? புராணக் கதையா? இது எந்த அளவுக்கு உண்மையைக் கூறுகின்றது? இதில் கூறப் படும் சங்கம் முதல், இடை, கடைச் சங்கங்களில் எது? நக்கீரனுடன் இறைவன் வாதாடினான் எனின் நக்கீரன் காலம் என்ன? தருமி என்ற ஒருவன் இருந்தானா? அவ் வாறாயின் அவனது பாடல்கள் ஏதேனும் உண்டா? இந்தக் கதை நிகழ்ச்சி சங்கப் பாடல்களில் உள்ளதா? இதைப் பண்டைய புலவர்கள் குறிப்பிடாதது ஏன்? என்ற பல வினாக்கள் தோன்றுகின்றன. இவற்றுக் கெல்லாம் தெள்ளிதான விடை கண்டாலன்றி ஒரு முடிவைக் கூறுதல் இயலாது. எனினும், ஏழாவது நூற்றாண்டில் 'சங்கம்' என்ற சொல்லாட்சியினைக் காண்கிறோம். அவ்வளவே.

**கி.பி 5 ஆம் நூற்றாண்டு** — இக்கருத்துக்கு அரண் செய்யும் சான்றுகளில் ஒன்றாக அறிஞர்களால் கருதப் படுவது அகநானூற்றில் காணும் 'பாடலி'யின் அழிவு பற்றிய செய்தி.

*'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்*
*சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை*
*நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ'* (அகம்:265)

கங்கைக் கரையிலுள்ள பாடலிபுரம் என்ற நகரானது வெள்ளப் பெருக்கால் அழிவுற்றது. அதன் காலம் 5ஆம் நூற்றாண்டு ஆகும். மற்றொன்று சமுத்திர குப்தனின் தென்னாட்டுப் படையெடுப்பு. அதன் காலமும் கி.பி. 5ஆம் நூற்றாண்டு. இவ்விரண்டு கருத்துடைப் பாடல்களையும் பாடியவர் மாமூலனார் என்ற புலவர். எனவே, சங்க இலக்கியங்களில் பாடல் செய்துள்ள மாமூலனாரும் அந்தக் காலத்தைச் சார்ந்தவராவர் சங்கமும் அக்காலமான 5ஆம் நூற்றாண்டாகும் என்ற முடிவினைக் கூறுகின்றனர்.

இவ்வாறான கருத்துத் தோன்றுவதற்குக் காரணம் 'பாடலி'யின் பொருள் மயக்கமேயாகும். மேலும் நந்தர் என்று வருகின்ற சொல் நந்தர் குலத்தைக் குறிப்பது. நந்த வம்சம் மோரியருக்கு முற்பட்டது. நந்தர் தம் இறுதி அரசன் மகாபத்ம நந்தன். இவன் கி.மு.371இல் வாழ்ந்தவன். எனவே, நந்தரைப் பற்றிப் பாடிய மாமூலனாரும் கி.மு. நான்காம் நூற்றாண்டினராகல் வேண்டும். ஆனால் இது ஏற்புடைய கருத்து ஆகாது.

மோரியர் காலம் சந்திரகுப்த மௌரியன் காலத்தில் துவங்குகின்றது. கடைசி நந்தனை அழித்து விட்டுக் கி.மு. 322இல் அரியணை ஏறுகிறான் சந்திரகுப்தன்.

இனிக் குப்தர் காலம் மௌரியர் காலத்துக்குச் சுமார் 500 ஆண்டுகளுக்குப் பிற்பட்டுத் துவங்குகிறது. அதன் முதல் அரசன் சந்திரகுப்தன். இவன் கி.பி. 319 இல் முடி சூடுகிறான். இவனுக்குப்பின் சமுத்திர குப்தன் ஆட்சிக்கு வருகின்றான். இவன் கி.பி. 336 முதல் கி.பி. 380வரை அரசோச்சுகிறான். தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்து காஞ்சியில் விஷ்ணு கோபப் பல்லவனையும், கேரளத்தில் ஒரு தலைவனையும் வென்றவன் இவனே. இது, கி.பி. 4ஆம் நூற்றாண்டில் நிகழ்கின்றது.



இவ்வரலாற்றுப் போர் நிகழ்ச்சியினை சங்கப் புலவர்களில் ஒருவர்தான் அறிந்திருக்கக் கூடுமா? வரலாற்றுப் புலவர் என்று கருதப்படும், சேரன் புகழ் பாடிய பரணர் சேர நாட்டின் மீது வடபுலத்தரசன் படையெடுத்து வந்து வென்ற செய்தியினைக் குறிப்பிடாதிருப்பாரா? மேலும், இப் படையெடுப்பு நான்காம் நூற்றாண்டின் மத்தியில் நடக்க ஐந்தாம் நூற்றாண்டினைச் சார்ந்தவராக மாமூலனாரைக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? இவ்வாறான சிக்கல்கள் இக்காலப் பகுதியைக் குறிப்பிடும்போது எழுகின்றன.

**கி.பி. 2ஆம் நூற்றாண்டு:**—இதற்கு ஆதாரமாக இருப்பது சிலப்பதிகாரச் செய்திகளே. சேரன் செங்குட்டுவன் கண்ணகி வழிபாடு செய்கின்றான். அதற்கு ஈழத்து வேந்தன் முதலாம் கயவாகு வந்திருக்கின்றான் என்பதனை,

*''கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்*
*எந்நாட்டு ஆங்கண் இமைய வரம்பனின்*
*நன்னாள் செய்த நாளணி வேள்வியில்*
*வந்து ஈக என்றே வணங்கினர் வேண்ட''*

(*சிலம்பு:வரந்தருகாதை* 160-163)

என்னும் பகுதியால் அறிகிறோம், இவன் காலம் கி.பி. 171 முதல் 193 வரையாகும். இரண்டாம் கயவாகு மன்னன் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். எனவே, முதலாம் கயவாகுவின் காலத்தை ஒட்டித்தான் சிலப்பதிகாரம் தோன்றியிருக்க வேண்டும். அதையொட்டிச் சங்கமும் இருந்திருக்க வேண்டும். கண்ணகி மதுரை மாநகரை எரியூட்டச் சங்கமும் அழிந்திருக்க வேண்டும். ஆகவே கி.பி. 2ஆம் நூற்றாண்டாகலாம் என்று முடிவு செய்துள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் தொண்டை நாட்டைக் கைப்பற்றிக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு

ஆண்டவர்கள் பல்லவ வம்சத்தினர். ஆனால் அவர்களைப் பற்றிய செய்திகள் எதுவும் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. எனவே, பல்லவரது காலத்துக்கு முன்பே சங்கம் அழிந்து பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும். இளந்திரையன் என்ற முதற்பல்லவத் தமிழ் மன்னன் தொண்டை நாட்டைக் கைப்பற்றிச் செல்வாக்குப் பெறுகின்ற காலச் சூழ்நிலையில் சங்கம் அழிவெய்தத் துவங்குகிறது. புலவர்கள் சிதறுண்டு போகின்றனர். நாட்டில் குழப்ப நிலை வளர ஆரம்பிக்கின்றது.

பட்டினப்பாலை குறிக்கும் கரிகாலனும், பெரும்பாணாற்றுப்படை புகழும் திரையனும் ஒரு காலத்தவர் என்பதை அவ்விருவரையும் உருத்திரங் கண்ணன் பாடிய பாடலைக் கொண்டு உணரலாம். தொண்டை மானிளந் திரையனும், அதியமான் நெடுமானஞ்சியும் சமகாலத்தவர் என்பதை,

*'இவ்வே, பீலியணிந்து மாலை சூட்டிக்*
*கண்டிர ளேன் காழ் திருத்தி நெய்யணிந்து*
*கடியுடை வியனக ரவ்வே, யவ்வே*
*பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து*
*கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்*
*உண்டாயிற் பதங்கொடுத்து*
*இல்லாயி னுடனுண்ணும்*
*இல்லோ ரொக்கல் தலைவன்*
*அண்ணல் எம்கோமான் வைந்நுதி வேலே.'* (புறம் : 95)

என்ற ஔவையாரின் தூதுப் பாடலின் செய்தியால் அறியலாம். இவர்கள் எல்லாம் கடைச்சங்க அழிவுக்குப் பின்னர் வாழ்ந்தவர்களாவர்.

எனவே, கி. பி. 2-ஆம் நூற்றாண்டுப் பகுதிகளில் கடைச்சங்கம் அழிவு பட்டிருத்தல் வேண்டும். அதுவரையில் சங்கம் இருந்திருக்க வேண்டும் என்பது திண்ணம்.



என்னும பாடல் இதற்குக் காட்டாக அமைந்துள்ளது. இப்புல்லியைக் 'கள்வர் கோமான் மாவண் புல்லி' என்று புலவர்கள் சிறப்பித்துள்ளனர். இதனை

*"கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்*
*மழபுலம் வணக்கிய மாவண் புல்லி*
*விழவுடை விழுச்சீர் வேங்கடம்"* (அகம் : 61)

என்னும் மாமூலனார் பாடலால் அறியலாம். கள்வர்—களவர் என்பதன் மரூஉ; அல்லது கள்வர் என்று புள்ளி கொடுத்து எழுதியுள்ளனர் என்று கருதவும் இடமுண்டு. கள்வர் நாடு என்பது கன்னடக் கல் வெட்டுக்களில் 'களவர நாடு' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. களப்ர என்பது பகர வகரப் பரிமாற்றத்தால் 'களவர்' எனத் திரிந்து, தமிழிலக்கியங்களில் களவர் அல்லது கள்வர் என்று எழுதப் பெறலாயிற்று எனக்கொள்ளலாம். இனிக் 'கள்வர்' என்ற தமிழ் 'களவர்' என்றும் 'களப்ர' என்றும் திரிந்தது என வாதித்திடலும் ஒன்று.

இவர்களது பெயரடைகளைக் கொண்டும், இவர்களது நாடு வேங்கடமும், வேங்கடத்தும்பரும் என்பது கொண்டும், அது தமிழ் மொழியல்லாத வேற்று மொழி பயிலப் பெற்ற மொழி பெயர் தேயம் என்பது கொண்டும் களப்பிரர் புல்லியினத்தவராக வேங்கடமலைச் சாரல் பகுதியினை ஆண்டு வந்த ஒரு மலைவாழ் அரசகுடியினராக இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம்.

எனவே, திடீரென்று ஒரு மரபினர் தோன்றி நாட்டைக் கைப்பற்றி ஆண்டனர் என்று கொள்வதினும், களவர் குலத்துப் புல்லியரசன் வழியினர் தமிழ் நாட்டின் சீர் கேடுற்ற நிலையினைப் பயன் படுத்திக் கொண்டு அதைக் கைப்பற்றியிருக்க வேண்டும் எனவோ, பல்லவர் ஆதிக்கம் வடபால் மேலோங்கியது களவர் குலத்தார் நாடு பிடிக்க வேற்றிடம் நாடிச் செல்லக் காரணமாக இருந்திருக்க வேண்டும் எனவோ கொள்ளலாம்.

ஆகவே, தொண்டை நாட்டில் செல்வாக்குப் பெற முடியாமல் தமிழ் நாட்டைக் கைப்பற்றும் எண்ணத்துடன் தெற்கு நோக்கிவந்து சோணாட்டைக் கைப்பற்றி அவ்வழியே பாண்டிய நாட்டுக்குள் புகுந்திருக்க வேண்டும் என்பதை ஒருவாறு தெரியலாம்.

எனின், களவரப் புல்லியினத்தரசர்களின் சமய நிலை என்ன ? என்ற வினா எழுகின்றது சங்க இலக்கியங்களைக் கொண்டு ஆராயுமிடத்து அன்றைய வாழ்வில் மக்களால் வணங்கப்பட்ட அல்லது போற்றப் பட்ட கடவுளர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாமே அன்றிச் சமய நிலைகள்—சமய தத்துவங்கள்—கொள்கைகள் முதலானவற்றைத் தெளிவாக அறிந்து கொள்வது என்பது உண்மையில் இயலாத ஒன்று. அவ்வாறான ஒரு குறிப்பிட்ட தத்துவநிலை அன்று இல்லாததால்தான் பௌத்த—சமண சமயங்கள் எளிதின் நுழைந்து செல்வாக்குப் பெற முடிந்தது. அவ்வாறு செல்வாக்குப் பெற்ற நிலையில் அவை தத்தம் கோட்பாடுகளைப் பரப்ப அவர்கள் மொழியினையே பயன்படுத்தியிருத்தல் வேண்டும். எனவே, மொழி பெயர் தேயத்துக் களவர் தலைவன் புல்லியும் அவன் இனத்தாரும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர் என்பது ஒரு புறமிருக்க, தம் நாட்டு மொழியினையும், சமயத்தினையும், சமயச் செல்வாக்கினால் இடம் பெற்ற பாகதம், பாலி மொழிகளையும் போற்றியிருத்தல் வேண்டும் என்பதும் ஒருதலை.

இப்புல்லியின் பெயருடன் ஓரூர் கன்னட நாட்டில் இருந்ததையும், அங்கு அருகக் கடவுள் கோயில் இருந்ததையும் கன்னட நாட்டு ஹொாஸக் கோட்டைச் செப்பேடுகள் (பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 378) குறிப்பிடுகின்றன.

'கொங்கணியதிராசனது பன்னிரண்டாவது ஆட்சியாண்டில், பல்லவ சிம்ம விஷ்ணுவின் தாய் புல்லியூர் என்ற கிராமத்தில் எழுந்தருளுவித்த அருகக் கடவுளின் கோயிலுக்கு நிவந்தமாக அவ்வூர் ஏரியின் கீழ்ப்பகுதிகளில் நஞ்சை நிலம், வீடு முதலானவற்றை வழங்குகின்றாள்' என்று அச்செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. இதில் 'புல்லியூர்' என்பது 'புல்லி' என்று தமிழ் இலக்கியப் பாடல்கள் குறிக்கும் அரசனது பெயரின் பின் தோன்றியிருக்க வேண்டும் என்பதை நாம் துணியலாம்.



இதுபோன்ற காரணங்களால் 'களவர்' தமிழ் நாட்டின் வட எல்லையில் வாழ்ந்த தென்னிந்திய அரச குடியினரே என்பது போதருகின்றது. தமிழகத்தின் வட எல்லையில் மேற்கிலிருந்து கிழக்காக எடுத்துக் கொண்டால் கொங்கணர், கதம்பர், களவர், தொண்டையர்கள் ஆண்டு வந்திருக்கின்றனர் என்பது தெளிவு.

*'.......... தெனாஅது*
*வெல்போர்க் கவுரியர் தருப்புழை திறப்பின்*
*ஆகொள் மூதூர்க் கள்வர் பெருமகன்*
*ஏவலிளையர் தலைவன் மேவார்*
*அருங்குறும் பெறிந்த ஆற்றலொடு பருந்துபடப்*
*பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கைக்*
*கெடாஅ நல்லிசைத் தென்னன்.'* (அகம் : 342)

என்ற அக இலக்கியப் பாடல் ஒன்றில் பாண்டியனை மதுரைக் கணக்காயனார் 'கள்வர் பெருமகன்' என்று குறிப்பிடுகின்றார். ஒரோவழி இப்பாண்டியன் கள்வா புல்லியை வென்றதால் ஏற்பட்ட சிறப்பு அடைமொழியாகவும் இருக்கலாம்.

## களப்பிரரும் முத்தரையரும்

கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் தஞ்சை, வல்லம், புதுக்கோட்டைப் பகுதிகளை முத்தரையர்கள் என்ற ஒரு இனத்தவர் ஆண்டு வந்தனர். இவர்கள் பல்லவருக்குத் துணையாகப் பாண்டியனை எதிர்த்துச் செய்த பெரும்

போரினை விளக்கும் பாடல்கள் செந்தலையில் உள்ள கோயில் தூண்களில் காணப்படுகின்றன. அவை 'கள்வார கள்வன்' என்றும், கள்வர் பெருமகன் என்றும் இவர்களைக் குறிப்பிடுகின்றன. மேலும், விஜயாலய சோழன் கி.பி. 9ஆம் நூற்றுண்டளவில் சோழ நாட்டை மீண்டும் கைப்பற்றுகின்ற காலை, இம்முத்தரையரிட மிருந்துதான் கைப்பற்றினன் என்று சோழர் கல்வெட்டுச் சாசனங்கள் கூறுகின்றன. இதனைத் 'தஞ்சை கொண்ட கோப்பரகேசரி' என்று வீரசோழபுரம் கல்வெட்டுக் கூறுகின்றது. ஆகவே, விஜயாலயனுக்கு முன்பு தஞ்சை வேற்றரசர் கைப்பிடியில் இருந்தது என்பதையும் அவர்கள் முத்தரையர்களாக இருக்கவேண்டும் என்பதை யும் அறியலாம்.

எனின், முத்தரையர் யார்? அவர்களுக்கு இப்பெயர் எவ்வாறு வந்தது? மேல் குறிப்பிடப்பட்ட களவர்கள் மூவேந்தர்களையும் வென்று ஒரு குடைக்கீழ் நாட்டை ஆண்டனர் என்று பாடல்களில் காணப்படுகின்றது. அவ்வாறு மூவேந்தரையும் வென்று மூன்று நாட்டையும் கைப்பற்றிய சிறப்புக் கருதி இவர்கள் முத்தரையர்கள் என்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்ற ஒரு விளக்கத்தினையும் கூறமுடியும்.

இவ்விடத்தில் வடவடுகர் பற்றித் தமிழிலக்கியத்தில் வருகின்ற,

*'தென்பரதவர் மிடல் சாய*
*வடவடுகர் வாளோட்டிய*
*தொடையமை கண்ணித் திருந்து வேற்றடக்கைக்*
*கடுமாகடைஇய விடுபரி வடிம்பின்*
*நற்றூர்க் கள்ளின் சோழன் கோயில்*
*புதுப் பிறையன்ன சுதை செய் மாடம்.* (புறம் : 378)

என்ற பகுதி நோக்கற் பாலது.



'பெரும்பிடுகு' 'மாற்பிடுகு' என்று அடை மொழி களாலும், 'காடக்க முத்தரையர்' என்று வருகின்ற தொடராலும் முதலில் இவர்கள் பல்லவரின் கீழ் இருந் தனர் என்பதையும், 'வாள்வரி வேங்கை குத்தியது' என்று காணப்படுகின்ற சாசனத் தொடரால் இவர்கள் பின்னர் சோழரின் கீழ் இருந்தனர் என்பதையும் துணிய முடியும். இவ்வாறு தம் பேரரசு நிலை தளர்ந்து, வலிகுன்றி வேற்றரசர்களின் கீழ் சிறு தலைவர்களாக இருந்த காலத் தும் 'முத்தரையர்' என்ற சிறப்பு அடைமொழியுட னேயே வழங்கப்பட்டு வந்துள்ளனர்.

'மாறன்' என்று இவர்களைச் சாசனங்கள் கூறு கின்றன. பல்லவ—பாண்டியப் போரில் துணை சென்று பாண்டியரை வெற்றி கொண்ட காரணத்தால், அப் பெயரை இவர்களுக்கு இட்டு வழங்கி யிருக்கின்றனர் பாடல் ஆசிரியர்கள்.

இனி, இவர்கள் களவர் மரபினர் என்பதற்கு, 'கள்வர் கள்வன்', 'களவார கள்வன், என்ற தொடர் களும், 'முத்தரையர்' என்ற பெயரும், கல்வெட்டுக் களில் ஒரு சேரப் பயிலப் பெற்றிருத்தலே சான்றாகும்.

## கன்னடக் கல்வெட்டுக்களில் முத்தரையர்

கன்னட நாட்டுப் பகுதிகளை ஆண்டுவந்த கங்க அரசர்களுக்கு 'முத்தரசர்' என்ற சிறப்பு அடைமொழி இருந்துள்ளது. கங்கன் ஸ்ரீபுருஷ மகாராசனை இவ் வாறான அடைமொழியுடன் குறிப்பிட்ட இடங்கள் கன்ன டச் சாசனங்களில் காணப்படுகின்றன.

*" ஸ்வஸ்திஸ்ரீ கொங்கணி முத்தரச ஸ்ரீ புருஷ*
*மஹா ராஜாதிராஜ பரமேஸ்வர......"*
[HGOK : P ; 118, No : 24]

*" ஸ்வஸ்தி ஸ்ரீமத்*
*கொங்கொணி முத்தரச*
*ர் அயிசதே......"* [I bid : P : 124]

என வருகின்ற தொடர்களை நோக்குமிடத்து, கன்னட நாட்டை ஆண்ட கங்க அரசர்களுக்கு முத்தரசர் என்ற சிறப்புண்மையை அறியலாம். இவர்களுக்கும் கதம்பர் களுக்கும் அரசியல் போராட்டம் இருந்துள்ளது என்ப தைச் சரித்திரம் கூறும். இவர்கள் சமண சமயச் சார்பு மிக்கவர்கள் என்பதையும் சமண சமயத் தத்துவங்களில் துறை போகியவர்கள் என்பதையும் கொங்குதேச ராசாக்கள் என்ற சரித நூல் கூறுகின்றது.

எனவே, களவர நாட்டினராகிய கங்கர்கள், களப் பிரர் என்றும், முத்தரையர் என்றும் சிறப்புடன் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும், களவர நாடு மைசூர்ப் பகுதியில் உள்ளதால் அதுவே அவர்கள் தாயகம் ஆகலாம் என் பதும், களவர நாடு என்பதே திரிந்து ‘கன்னடு' என்றும், ‘கன்னட நாடு' என்றும் வழங்குவதாயிற்று என்பதும், அது வடுகர் நாடு என்று தமிழிலக்கியங்களில் பண்டு குறிப்பிடப் பெற்றுள்ளது என்பதும், அது தமிழ் மொழி யல்லாத மொழி பெயர் தேயம் என்பதும் தெளிவாக அறியக் கிடக்கின்றன.

> *" நேரா வன்தோள் வடுகர் பெருமகன்*
> *பேரிசை யெருமை நன்னாட் டுள்ளதை*
> *அயிரியா றிறந்தனர்......"* [அகம் . 253]

என்ற இந் நக்கீரர் பாடலால் வடுகர் நாடு மைசூர் (எருமை நன்னாடு) என்பதனைத் தெளியலாம்.

ஆகவே, களப்பிரர் என்பார் தமிழகத்தின் வட எல்லைக்கு அப்பால் வாழ்ந்த வேற்று மொழியினர் என் பதும், கலிதேவ வணக்கம் கொண்டு, சமண சமயத் தொடர்புடன் நந்திமலைப் பகுதியினைக் கைப்பற்றிவாழ்ந்த அரசகுடி மக்களே என்பதும், களவர் இனத்த ‘புல்லி' என்ற அரசன் ஒரோவழி இவ்வமிசத்தினைச் சார்ந்தவ னாகல் வேண்டும் என்பதும், அரசியல் குழப்பமும், நாடு பிடிக்கும் எண்ணமும், இவர்கள் தெற்கு நோக்கி



வரக் காரணமாக இருந்துள்ளன என்பதும், அவ்வாறு தெற்கு நோக்கி வந்து முத்தரையர் என்ற சிறப்பினைக் கி. பி. 7-8-ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பே பெற்று விட்டனர் என்பதும், பின்னர் அவர்கள் செல்வாக்கிழந்து சிறு தலைவர்களாகப் பேரரசுகளின் கீழ் அடங்கி விட்டனர் என்பதும், அவ்வாறு சிறு தலைவர்களாக ஆயினபோதும் செல்வாக்குடன் இருந்தனர் என்பதற்கு அவர்கள் வெளியிட்ட சாசனங்களும், அவர்களைப் பற்றிய சாசனப் பாடல்களும் சான்று பகர்கின்றன என்பதும் இதுவரை கூறிவந்த செய்திகளால் ஒரு தலையாத் துணியப்படும் முடிவுகளாகும்.

# IV தமிழ் நாட்டில் களப்பிரர்

## தொண்டை நாட்டில் களப்பிரர்

இக் களப்பிரர் தமிழ் நாட்டுக்குள் எவ்வாறு நுழைந்தனர் ? என்ற வினவை நோக்குவோம். இவர்கள் ஆதி பூர்வம் தென் கன்னடப் பகுதி எனப் பார்த்தோம். அவ்வாறுயின் அன்றைய சூழ்நிலையில் தமிழ்நாட்டுக்குள் வரவேண்டுமாயின் தொண்டை நாடு வழியே தான் வந்திருக்கவேண்டும். காரணம் அன்றைய பல்லவ நாடு ஆந்திரப் பகுதியை விட்டுத் தெற்கில் பாலாறு வரை பரவியிருந்தது. பப்பதேவன் என்ற முதற் பல்லவ மன்னன் இவர்களை எதிர்த்து விரட்டி யிருக்கிறான். பின்னர் சிவஸ்கந்த வர்மன் தென் பெண்ணைவரை தன் நாட்டை விரிவாக்கப் பகைவரை மேலும் விரட்டி யிருத்தல் வேண்டும். அன்றியும், ஆறும் நூற்றாண்டின் இறுதியில் சிம்ம விஷ்ணு பல்லவனைக் 'களப்பிரரை வெற்றிகண்ட மாவீரன்' என்று இரண்டாம் நந்திவர்மனின் காசாக்குடிச் சாசனம் (சுலோகம் 20) புகழ்கின்றது.

இரண்டாம் நந்தி வர்மப் பல்லவன் களப்பிரருடன் போரிட்டு வென்றான் என்ற செய்திகளை அவனது புல்லலூர்ச் செப்பேடுகளும் (சுலோகம் 6), பட்டத்தாள் மங்கலச் செப்பேடுகளும் (சுலோகம் 9) கூறுகின்றன.



இவையெல்லாம் அவர்கள் பல்லவ நாட்டில் நுழைந்து நிலைபெற முடியாமல் தெற்கில் வந்துவிட்டனர் என்பதையே காட்டுகின்றன.

## சோணுட்டில் களப்பிரர்

அவ்வாறு தென் கன்னடப் பகுதியிலிருந்து விரட்டப் பட்டுப் பல்லவ நாட்டில் நுழைந்து, அங்கும் நிலைபெற இயலாது மேலும் தெற்கு நோக்கி ஓடிவந்த களப்பிரர் சோணுட்டுக்குள் நுழைந்து விட்டனர். தமிழ்நாடு வறுமையில் தொடர்ந்து இருந்த காலப் பகுதியே அக்காலம் எனக் கொள்ளலாம். இக்காலப் பகுதியில் கரிகாலனுக்குப் பின்னர் நிகழ்ந்த சோணுட்டு அரசியல் நிலை என்ன என்பதை அறிதற்கு ஏற்ற ஆதாரங்கள் இல்லை. செல்வாக்கு இழந்த நிலையினைத்தான் நாம் உணர முடியும். தாயாதிச் சண்டை யெல்லாம் நடந்து கொண்டிருந்தன என்றும் சேரன் செங்குட்டுவன் அவற்றில் தலையிட்டு முறை செய்தான் என்றும் இலக்கியச் செய்திகள் கூறுகின்றன. எனவே, குழப்பமும் இருந்திருக்க வேண்டும். அது களப்பிரர் சோணுட்டில் நிலைபெற எளிதாக ஓர் சூழ்நிலையைத் தந்திருக்க வேண்டும். மேலும், புகார் நகரில் தங்கள் தலைமையை ஏற்படுத்தும் அளவுக்கு அவர்கள் உயர்ந்திருக்கவேண்டும் என்பதும் ஒருதலை. ஏனெனில், கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் பகுதிகளில் இருந்த புத்ததத்தர் என்ற பௌத்தர், புகாரில் ஆட்சி செய்த அச்சுதன் என்ற அரசனது அவையில் தனது அபிம்மாவதாரம் என்ற நூலை அரங்கேற்றியதாக அந்நூலில் கூறிச் செல்கின்றார். எனவே, களப்பிரரது ஆட்சி நிலை பெற்றுவிட்டது என்பது தெளிவாகின்றது.

மேற்கண்ட காரணங்களிலிருந்து களப்பிரர் கன்னடப் பகுதியிலிருந்து தொண்டை நாடு வழியாகவே சோணுட்டுப் புகார்வரை வந்திருத்தல் வேண்டும் என்

பதையும், அதுகாலைச் சோணாட்டில் சிறந்த ஆட்சி ஏற்படாததால் இவர்கள் எளிதில் அந் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி யிருத்தல்வேண்டும் என்பதையும், அச்சுதன் ஆட்சிக்கு முன்பே களப்பிரர் ஆட்சி தெற்கில் கால்கொண்டு விட்டது என்பதையும், அவர்கள் கி. பி. 2-3ஆம் நூற்றாண்டுகளில் தங்கள் அரச யாத்திரையினைத் துவங்கி 4-5ஆம் நூற்றாண்டுகளில் சோணாட்டில் நிலையாக ஆட்சி புரிந்துள்ளனர் என்பதையும் தெளிவாக உணரலாம். தமிழ் நாட்டில் தலைநகரை அமைத்து ஆட்சி செய்த களப்பிரர் அரசர்களில் பெயர் தெரிந்தவன் புகாரைத் தலைநகராக்கி ஆண்ட அச்சுதக் களப்பாளன் என்ற ஒருவனே என்பதை நாம் கருதுதல் வேண்டும்.

### அச்சுத களப்பாளன்

இவனைப் புகழ்வனவாகப் பல பாடல்கள் தமிழ் நூற்களில் காணக் கிடக்கின்றன. இவனது தாயகம் நந்திமாமலைப் பகுதியாகும். இவன் தன் ஆட்சியில் மக்களை ஆதரித்துச் சிறந்த புகழைப் பெற்றிருக்கின்றான். அதனால்தான்,

*'பெரும்புகழ் அச்சுதக் கோவே*
*நந்திமா மலை சிலம்ப*
*நந்தி நிற்பரவுதல் நாவலர்க் கரிதே.'*

என்று பாடியுள்ளனர் புலவர்கள். இவனைப் போற்றிப் புகழுதல் மிக அரிது. ஏனெனில், அவனது புகழை அளவிட முடியாது. அவ்வாறு புகழுடன் நந்தி மலைப் பகுதியினை ஆண்ட அவன் சிறிது சிறிதாகத் தொண்டை மண்டலப் பகுதியைக் கடந்து புகாரினைக் கைப்பற்றிப் பேரரசனாக வாழ்ந்திருக்கிறான். தமிழ் மூவேந்தரும் தம் சிறப்புக்களை இழந்து வாழ்கின்றனர். அச்சுதன் மூவேந்தரையும் வென்று ஒரு மொழி—ஓராணை செல்லும் ஆட்சியினை நிலை நாட்டுகின்றான். இக் கருத்தினை



*'அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்*
*தொடு கழற்கொம்பூட்டு பகட்டெழின் மார்பிற்*
*கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்*
*புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்*
*தொன்று முதிர்கட லுலகம்*
*ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே.'*
(காரிகை பக் : 112—113)

என்று வரும் பாடற் பகுதியால் அறியலாம். தமிழ் நாவலர் சரிதையில் அச்சுத களப்பாளன் மூவேந்தரையும் வென்றான் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

அச்சுதனைப்பற்றிக் காணப்படும் பிறிதொரு பாடலை நோக்குவோம் அது,

*'துவைக்குந் துளிமுன்னீர்க் கொற்கை மகளிர்*
*அவைப்பதம் பல்லுக்கு அழகொவ்வா முத்தம்*
*மணங்கமழ்தார் அச்சுதன் மண்காக்கும் வேலின்*
*அணங்கமுத மந்நலார் பாட்டு.'* (காரிகை பக் ; 178)

என்று அமைந்துள்ளது.

இவ்வாறு ஒரு களப்பிர அரசன் புலவர் பெருமக்களால் போற்றிப் புகழப்படுகின்றான் எனின், அவனது ஆட்சியின் சிறப்பு எந்த அளவுக்கு உயர்ந்திருக்க வேண்டும்? அதை விடுத்து அவர்களது ஆட்சியில் நலம் அழிந்து, தீமைகள் மலிந்து மக்கள் அவதிப்பட்டனர் என்று கூறுவது எவ்வாற்றானும் ஏற்புடைத்தன்று. அரசியல் அமைப்பினைப் பொது நிலையில் நின்று நோக்குவோமாயின் எந்த ஒரு அரசும் தனது செல்வாக்கினைப் பரப்பத்தான் முயன்றிருக்கிறதே அன்றி வென்ற நாட்டின் அரசியல், சமுதாய நிலைகளைப் போற்றி ஏற்றுக்கொண்டதாக இல்லை. தமது கொள்கைகளைப் புகுத்தி நிலை நாட்டிய பின்னர் தான் வென்ற நாட்டின் சமுதாய அமைப்பினை நோக்குகின்றனர். ஏற்புடையதாயின் அதனையும் ஏற்றுக் கொள்கின்றனர்.

அந்த நிலையில் தான், சொந்த நாட்டிலிருந்து கதம்பர்களாலும், தொண்டை நாட்டிலிருந்து பல்லவர்களாலும், விரட்டி ஓட்டப்பட்ட களப்பிரர்கள், வலிகுன்றியிருக்கின்ற சோணாட்டரசர்களை எளிதில் வென்று புகாரைத் தலைநகராக்கி ஆண்டிருக்கின்றனர். வறுமையின் கொடுமையில் மயங்கிக் கிடந்த பாண்டிய நாட்டினையும் கைப்பற்றுகின்றனர். இவையனைத்தும் கி.பி. 2-3ஆம் நூற்றாண்டுகளில் களப்பிரர் கால்கொள்கின்ற காலத்திய நிகழ்ச்சிகள். அவர்களில் சிறப்பாக ஆண்டு புகழ்பெற்ற அரசன்—பெயர் தெரிந்த பழைய அரசன் அச்சுத களப்பாளன் என்பவனே. தமிழ் இலக்கண நூல்களில் காணும்பல உதாரணச் செய்யுட்கள் களப்பாளனைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுகின்றன.

## பாண்டியர் நாட்டில் களப்பிரர்

பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சி இருந்தது என்பதற்கும், அவ்வாட்சி இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக நின்று நிலவியது என்பதற்கும், சமுதாயத்தில் சீர் கேடுகள் ஏற்பட்டு நாடு குழப்ப நிலையில் விடப்பட்டது என்பதற்கும், சமய நெறிகள் எல்லாம் நிலை தடுமாறி விட்டன என்பதற்கும், வேள்விக்குடி, மதுரகாநல்லூர்ச் சாசனங்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால், குறிப்பிட்ட ஒரு அரசன் அல்லது எந்த எந்த அரசர்கள் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி ஆண்டார்கள் என்ற செய்தி தெளிவாகத் தெரிந்திலது. ஆயினும், 'கருநாடர்' என்ற தொடர் கன்னட நாட்டவர்களைக் குறிக்கும் எனின் பெரிய புராணத்தில் சேக்கிழார் குறிக்கும் 'கருநாடர்' என்பதும் கன்னட தேசத்தவரையே சுட்டும் என்பதில் ஐயமில்லை.

அந்தக் கருநட வேந்தன் நாட்டைக் கைப்பற்றும் எண்ணத்துடன் தமிழ் நாடுடை மன்னன் பாண்டியனை வென்று மதுரையைக் கைப் பற்றினான் என்று சேக்கிழார் குறித்துச் செல்கின்றார்.



*'கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவல்*
*மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள் வானாய்*
*யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்தேர்*
*சேனைக் கடலுங் கொடுதென் திசைநோக்கி வந்தான்.*
(பெ. மூ. நா. பு. 11)

என்றும்,

*'வந்துற்ற பெரும்படை மண்புதையப் பரப்பிச்*
*சந்தப்பொதி யில்தமிழ் நாடுடை மன்னன் வீரம்*
*சிந்தச்செரு வென்று தன்னாணை செலுத்து மாற்றால்*
*கந்தப்பொழில்சூழ் மதுராபுரி காவல் கொண்டான்,'*
(பெ. மூ. நா. பு. 12)

என்றும் வருகின்ற பாடல்கள் இச்செய்திகளைக் குறிப்பனவே.

இவ்வாறு பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய இவர்கள் அருக சமயத்தினைச் சார்ந்து நின்றவர்களாய்ச் சைவ நெறிகளையும் பணிகளையும் தடை செய்கின்றனர். அந்தணர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரமதேயங்களைப் பறிமுதல் செய்தனர் என்று முன்பு பார்த்தோம். சைவ வழிபாடுகளை நிகழாதவாறு தடுத்த செய்திகளை,

*'படைநான் குடன்று பஞ்சவன் துரந்து*
*மதுரை வவ்விய கருநடர் வேந்தன்*
*அருகர்ச் சார்ந்து நின்று அரன்பணி அடைப்ப.'*

என்று வரும் கல்லாடச் செய்யுட் பகுதி தெளிவாகக் கூறுகின்றது.

எனவே, பாண்டிய நாட்டை இவர்கள் வென்றனர்; சைவ சமய நெறிகளைத் தடுத்தனர்; தங்கள் அருக சமயத்தைத் தழுவிப் போற்றினர் என்ற செய்திகளையும், மதுரை ஆட்சியினையும் கைப்பற்றிக் காவல் கொண்டனர் என்பதையும் நாம் உணரலாம்.

# V களப்பிரர் கலைகள்

## களப்பிரர் சமயம்

இவர்கள் சமயம் சமணம் என்பதைக் கண்டோம். சோணுட்டிலும், பாண்டிய நாட்டிலும் தங்களது அரசியல் செல்வாக்கினைப் பரப்பிய இவர்கள் தாங்கள் தழுவி யிருந்த சமண சமயத்தைப் போற்றியும், மொழியினைப் புகுத்தியும் வளர்க்கப் பெருமுயற்சி செய்தனர். சமண சங்கங்கள் ஆங்காங்கு எழுந்தன. சமண முனிவர்கள் மக்களால் மதிக்கப் பெற்றனர். இளங்கோவடிகள் சிலப் பதிகாரத்தில் சமண நோன்பிகளைப் பற்றி ஆங்காங்குக் கூறிச் செல்வதை நோக்கச் சமண சமயம் தமிழ் நாட்டில் செல்வாக்குடன் திகழ்ந்தது என்பதை எளிதில் உணர லாம். இவர்கள் காலத்தில் சிலம்பை ஒட்டிய காலத் தில், எழுந்த மணிமேகலை பௌத்த சமயச் செல்வாக் கினை உணர்த்தி நிற்கின்றது. எனவே, சமணமும், பௌத்தமும் ஓங்கிய நிலையில் இருந்தன என்பதை அறியலாம்.

கி.மு. 2ஆம் நூற்றுண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றுண்டு வரை கிடைக்கும் பிராமித் தமிழ்க் கல்வெட் டுகளில் காணப்பெறும் செய்திகளைக் கொண்டு, கடைச் சங்க காலத்திலேயே தமிழ் மன்னர்களின் செல் வாக்கில் சமண, பௌத்த சமயங்கள் ஓங்கியிருந்தன என்பதை அறியலாம். சிலவற்றைப் பார்ப்போம்.

கருவூர் அருகில் ஆரநாட்டார் மலையில் கிடைத்த ஒரு கல்வெட்டு சேர அரசர்கள் காலத்துச் சமணச் செல்வாக்கினைக் காட்டுகின்றது.

*'அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய*
*கோ ஆதன் சேரல்லிரும் பொறை மகன்*
*பெருங்கடுங்கோ மகனிளங்*
*கடுங்கோ இளங்கோ ஆகஅறுத்த கல்'*

*(கல்வெட்டுக்கள் பக் : 7)*

இதுவே அந்தச்சாசனம். செங்காயபன் என்ற அமண்ணன் பதிற்றுப்பத்தில் ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய பத்துக் களில் பாடப் பெறும் வாழியாதன், பெருஞ்சேரலிரும் பொறை, இளஞ்சேரல் இரும் பொறை ஆகிய அரசர் களின் காலத்தில் வாழ்ந்தவன். இச் சாசனம் கி. பி. 2 ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது. செங்குட்டுவன் காலத்துச் சமணச் செல்வாக்கினைச் சிலப்பதிகாரத்தால் உணரலாம்.

பின்வரும் சாசனம் பாண்டிய நாட்டில் சமணச் செல்வாக்கிருந்தமையைக் காட்டும்.

*'கணி நந்த ஆசிரிய இ*
*குவன்கெ தம்மம் இ*
*த்தஅ நெடிஞ் சழியன் ப*
*ணஅன் கடலஅன் வழுத்தி*
*ய் கொட்டு பித்த பளிஇய்.'*

*(தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள்)*

இது கணி நந்த ஆசிரிகன் என்ற சமணனுக்குக் கொடுக் கப்பட்ட தர்மம். இதைச் செய்து தந்தவன் நெடுஞ் செழியன். இவனுக்கு பணஅன், கடலஅன், வழுத்தி என்ற சிறப்புப் பெயர்களைக் கொடுத்துக் கல்லில் வெட்டி யிருக்கின்றனர்.

*'செம்மலுள்ளந் துரத்தலின் கறுத்தோர்*
*ஒளிறு வேலழுவங் களிறு படக்கடக்கும்*
*மாவண் கடலன் விளங்கில்.'* (அகம் : 81)

என்ற அக நானூற்றுப் பாடற் பகுதியில் ஆலம்பேரி சாத்தனுர் தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை 'மாவண் கடலன்' என்று விளித்திருப்பதையும், இச் சாசனத்தில் கடலன் என்று வருவதையும் ஒப்பு நோக்குக. மேலும், இதே புலவர் 'வானவன் மறவன் பிட்டனை'ப் பாடியிருப்பதும், கருவூர்க் கருகில் பிட்டங் கொற்றன் சாசனம் ஒன்று கிடைத்திருப்பதும் தமிழ் நாட்டுப் பண்டை வரலாற்றில் ஒரு காலக் குறிப்பினை உறுதிப் படுத்துவதற்கு ஏற்ப உள்ளன. இச் சாசனத்தின் காலம் கி. மு. 100 எனக் கருதுகின்றனர்.

*'வசையில் வெம்போர் வானவன் மறவன்*
*நசையின் வாழ்நர்க்கு நன்கலஞ் சுரக்கும்*
*பொய்யா வாய்வாட் புனைகழற் பிட்டன்.'* (அகம் : 143)

என்பது ஆலம்பேரி சாத்தனுர் வானவன் மறவன் பிட்டனைப் பற்றி அகநானூற்றில் பாடிச் செல்லும் பகுதி.

செங்கற்பட்டு மாவட்டம் திருநாதர் குன்றில் கிடைக்கும் ஒரு பிராமி-வட்டெழுத்துத் தமிழ்ச் சாசனம் சமண ஆசிரியர் ஒருவர் உண்ணுவிரத மிருந்து உயிர் நீத்த செய்தியைத் தெரிவிக்கின்றது. இச் சாசனத்தின் காலம் பிராமி எழுத்து வளர்ச்சியின் இறுதி நிலையையும் வட்டெழுத்துத் தோற்றத்தின் முதல் நிலையையும் காட்டும் காலம் எனகின்றனர். அது கி. பி. 4-5 ஆம் நூற்றுண்டாகலாம். சாசனம் பின் வருமாறு அமைந்துள்ளது.

*'ஐம்பத் தேழ் அன*
*சனந் நோற்ற*
*சந்திர நந்திஆ*
*சிரிகர் நிசீதிகை.'* (T. A. S. Vol : 1, Page : 231)



சமண முனிவர்கள் உண்ணு நோன்பு இருந்து உயிர் துறப்பர் என்ற செய்தியினையும், அதன் நினைவாக மக்கள் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புகின்றனர் என்பதையும் இச் சாசனத்தால் அறியலாம்.

*'உண்ணு நோன்போ டுயிர் பதிப் பெயர்த்ததும்.'*
*(சிலப்பதிகாரம் : நீர்ப்படைக்காதை : 83)*

என்ற சிலப்பதிகாரச் செய்தியினையும், சங்கப் பாடல்களில் காணும் வடக்கிருத்தலையும் இதனுடன் ஒப்பிட்டால் இப்பழக்கம் அனைவராலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்பதைத் தெரியலாம்.

எனவே, கி. மு. முதல் நூற்றுண்டளவிலேயே சமண சமயம் தமிழ் நாட்டில் கால் கொண்டு விட்டது என்பதையும், அரசியல் இடையீடு ஏற்படுமுன்பே சமயம் புகுந்து விட்டது என்பதையும் தெளிவாக உணரலாம்.

இவ்வாறு இவர்கள் அருக சமயத்தைச் சார்ந்திருந்தோடு, சைவ நெறிகளை வளராமல் தடை செய்தனர் என்பதையும் அறிகிறோம்.

*மதுரை வவ்விய கருநட வேந்தர்*
*அருகர்ச் சார்ந்து அரன்பணி அடைப்ப'*

என்று வருகின்ற கல்லாடச் செய்யுட் பகுதி இச் செய்தியினை உறுதிப் படுத்தும்.

இக்காலப் பகுதியிலேயே சமண சமயத்துடன் பௌத்தமும் தமிழ் நாட்டில் பரவியிருந்தது. 'ஆலம் பேரி சாத்தனுர்', 'ஆவூர்க் காவிதிகள் சாதேவனுர்,' 'கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனுர்,' 'பெருந்தலைச் சாத்தனுர்', 'சீத்தலைச் சாத்தனுர்' என்றெல்லாம் பயிலப்படுகின்ற புலவர் பெயர்கள் பௌத்த சமயச் சார்பினைக் காட்டுகின்றன. மணிமேகலை பௌத்தச் செல்வாக்கில் தோன்றிய

காவியம் அன்றோ? இச்சமயமும் இவர்கள் ஆட்சியில் சிறப்பாகவே இருந்துள்ளது. புத்ததத்தர் வாழ்ந்ததும், அவரது 'அபிம்மாவதாரம்' தோன்றி அரங்கேறியதும் இக்காலத்தில்தான். இந்நூலில் அவர் களப்பிர அரசன் அச்சுத விக்ரந்தன் புகார் நகரைத் தலைநகராகக் கொண்டு சோணாட்டை ஆண்டான் என்ற குறிப்பினை நூலில் தந்துள்ளார் என்பதை யெல்லாம் முன்னர் கண்டோம்.

## களப்பிரர் அரசியல்

இவ்வாறாகச் சமயமும், சமயக் கொள்கைகளும் நாட்டில் பரவி வந்ததுபோல, முறையானதொரு ஆட்சி அமைத்து ஆண்டனர் என்று சொல்வதற்கேற்ற ஆதாரங்கள் இல்லை எனலாம். களப்பிரர் ஆட்சி பற்றி அறியத் துணையாகும் ஒரே நூல் புத்ததத்தரது அபிம்மாவதாரமே. மேலே இதைப்பற்றிக் கூறினோம்.

தமிழ் இலக்கியங்களிலும் இலக்கண மேற்கோள் பாடல்களிலும் ஆங்காங்கு அச்சுதனைப் பற்றியும் அவனது சிறப்பான ஆட்சியினைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. ஆனால், சிறந்த அரசியல் அமைப்பில் தொடர்ந்து ஆட்சி செய்து தம்புகழ் பரப்பினர் என்று சொல்ல முடியாது. பாண்டிய நாட்டில் இவர்கள் ஓரளவு செல்வாக்குப் பெற்ற காலத்தில்தான் சமண சங்கம் கூடியிருக்க வேண்டும். அக்காலம் கி. பி. 4-5 ஆம் நூற்றாண்டாகலாம்

எனினும், இக்காலப் பகுதியில் களப்பிரர் ஆட்சி முறை, அரசியல் நிர்வாகங்கள் எவ்வாறு இருந்தன? யார்யார் ஆட்சிபீடம் ஏறி ஆளும் நிலையினைப் பெற்றனர்? அக்காலச் சூழ்நிலையில் மக்களின் நிலை எவ்வாறு இருந்தது? என்ற செய்திகள் யாவும் இன்னும் விளங்காத புதிராகவே உள்ளன.



## மொழி இலக்கியம்

இக்காலப் பகுதியில் செல்வாக்குப் பெற்ற இச் சமயங்கள் பாகதம், பாலி ஆகிய மொழிகளால் ஆன இலக்கியங்களைப் பெற்றிருந்தன. நாட்டில் இம் மொழிகளின் வளர்ச்சியும் ஆதிக்கமும் பரவின. தமிழ் மொழி அமைப்பு அம்மொழி யமைப்புக்கு ஏற்பத் திரியத் தொடங்கிற்று. சமண, பௌத்த முனிவர்கள் பாகத மொழியில் எண்ணித் தமிழ் மொழியைப் பொறித்தனர். இதற்குச் சான்றாகக் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பெற்றதாகிய சாதவாகனச் சதகர்ணியின் பாகதத் தமிழ் இருமொழி நாணயம் இவ் வமைப்பினை அல்லது மொழி பெயர்ப்பினைக் கொண்டிருக்கின்றது.

*'வஸிடி புதஸ ஸிரி ஸதகணிஸ ராஞோ.'*

*'வசிட்டி மகன்கு திரு சதகணிகு அரசன்கு.*

இக் காசு வசிட்டிபுத்ர ஸ்ரீ சதகர்ணி அரசனுடையது என்பதைப் பாதகம், தமிழ் ஆகிய மொழிகளில் பொறித்துள்ளனர்.

பின்னர் இக் குரவர்கள் வட்டார மொழியிலேயே தமது கருத்துக்களைப் பரப்ப எண்ணி நல்ல தமிழ்ப் புலவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டனர். இக் களப்பிரர் ஆட்சிக் காலத்தை ஒட்டி எழுந்தவையே பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள். இவற்றில் சில சமண சமயக் கொள்கைகளைக் கொண்டும், சில சமண முனிவர்களால் இயற்றப் பெற்றும் உள்ளன. நால்வகை உறுதிப் பொருள்களில் அறமும், வீடும் இவ்வகை நூல்களில் பெரிதும் போற்றப்பட்டன. எனினும், தமிழ் இலக்கண, இலக்கிய மரபுக்கு ஏற்ப அகத்திணைப் பாடல்களையும், யாப்பு, அணி இலக்கண நூற்களையும் வகுத்தனர். சீவக சிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி முதலானவை 8, 9ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய சமணக் காவியங்களே. யாப்பருங்கலம் கந்த புலவரும் ஒரு சமண முனிவரே.

### சமயக் கல்வி

பாண்டிய நாட்டில் கழுகு மலையில் காணப் பெறும் நூற்றுக்கணக்கான வட்டெழுத்துச் சாசனங்கள் சமண சமயக் குரவர்களின் பெயர்களைக் கூறுகின்றன. இவை கி.பி. எட்டாம் நூற்றுண்டளவில் தோன்றியவை. இவற்றை நோக்கும்போது, இவர்களின் கீழ் சமயக் கல்வி - பொதுக் கல்வி பெறப் பல மாணுக்கர்களும், மாணுக்கியர்களும் இருந்தனர் என்பதையும், சமயக் குரவர்களாக ஆடவரேயன்றிப் பெண்பாலரும் இருந் திருக்கின்றனர் என்பதையும் தெளியலாம். இவை யெல்லாம் சமண சமயம் மக்களிடையே கொண்டுள்ள பெருமதிப்பைக் காட்டுகின்றன. அரசியல் நிலை நீடித்து நிலைபெற முடியாமல் போய்விட்டாலும் கூட சமயநிலை அக்காலச் சூழ்நிலையில் வேரூன்றி யிருந்தது என்பது ஒருதலை.

வேற்றுப் புலத்தவரான களப்பிரர் தமிழ் நாட்டுப் பண்பாட்டு முறைகளை ஏற்றுக்கொள்ளாததில் வியப் பொன்றுமில்லை. தமிழ் மன்னர்கள் செய்த தானங்களை யெல்லாம் நடவாமல் தடுத்துப் பறித்துத் தம் சமயத்துக் குக் கொடுத்தனர் என்ற செய்திகளைக் கண்டோம். சைவ சமயம் இவர்கள் காலத்தில் ஆதரிப்பார் அற்றுத் தாழ்ந்த நிலையில் இருந்திருக்க வேண்டும் என்பதை அருகர்ச் சார்ந்து அரன் பணி அடைத்த நிகழ்ச்சிகளால் உணரலாம்.

பிற்காலத்தில் பல்லவர்கள் சமண சமயத்தை ஒரோ காலங்களில் தழுவியிருந்தாலும், வளர்ந்து வந்து கொண்டிருந்த பக்தி இயக்கத்தின் வேகத்தினுல் சமண சமயமும் தன் செல்வாக்கினை இழக்கலாயிற்று. பல்லவ வேந்தன் மகேந்திரவர்மன் வரலாற்றினையும், பாண்டிய மன்னன் கூன்பாண்டியன் வரலாற்றினையும் அதற்குச் சான்றுகளாகக் காட்டலாம்.

## VI களப்பிரர்—சமணம் சீரழிவு

பிற்காலத்தில் இவர்களில் சிலர் சமணம் விட்டுச் சைவ சமயத்தினைத் தழுவினர் என்பதை அறிகிறோம். திருநாவுக்கரசர் தருமசேனர் என்ற பெயருடன் சமணத் திலே சிறப்பான நிலையில் இருந்ததையும் பின்னர் இறைவன் திருவருளால் சைவ சமயத்துக்கு மாறினுர் என்பதையும், அதுகாலைக் காஞ்சியில் ஆட்சி நடத்தி வந்த மகேந்திரவர்ம பல்லவனும் சமண சமயம் விட்டுச் சைவன் ஆயினுன் என்பதையும் பெரிய புராணச் செய்தி களால் அறியலாம்.

இதுபோழ்து பாண்டி நாடு எப்படி யிருந்தது என்பதை,

*'பூழியர் தமிழ்நாட் டுள்ள பொருவில்சீர்ப் பதிகள் [எல்லாம்*
*பாழியும் அருகர் மேவும் பள்ளிகள் பலவுமாகிச்*
*சூழிருட் குழுக்கள் போலத் தொடைமயிற் பீலியோடு*
*மூழிநீர் கையிற் பற்றி அமணரே யாகி மொய்ப்ப.'*
[பெரிய புராணம். தி.ச.பு. : 601]

என்ற பாடலால் அறியலாம். பாண்டிய மாறவர்மன் முன்பு சமணனுக இருந்து ஞானசம்பந்தராலும், மந்திரி குலச்சிறையார், மனைவி மங்கையர்க்கரசியாராலும் சைவனுகினுன். இவனது நிலையை,

'வரிச்சிலைத் தென்ன வன்தான் உய்தற்கு வடவர் [கோமான்
திருவுயிர்த் தருளும் செல்வப் பாண்டிமா தேவி யாரும்
குரைகழல் அமைச்ச ரைாம் குலச்சிறை யாரும் என்னும்
இருவர்தம் பாங்கு மன்றிச் சைவம்அங் கெய்தா தாக.'
[பெரிய புராணம் தி.ச.பு. 603]

என்று விளக்குகின்றார் சேக்கிழார்.

இரண்டாம் நந்திவர்மப் பல்லவன் அந்தணர்களுக்கு இறையிலியாக நிலப் பகுதிகளைத் தரும்போது சைனக் கடுங் கோட்பாடுகளை அல்லது அதர்மக் கோட்பாடுகளை நீக்கிக் கொடுத்தான் என்று உதயேந்திரம் சாசனம் கூறுகிறது.

'இந்த எல்லைகட்குள் பட்ட இடங்களையும், நீர்ப்பாசன உரிமையோடும், சைனக் கடுங்கோட்பாடுகளை விலக்கியும் மன்னன் கொடுத்தான்.'
[S. I. I. Vol 2, Part 3, No. 74, Page 361]

இது உதயேந்திரச் செப்பேட்டுப் பகுதி.

கங்க அரசன், ஸ்ரீ ராமானுஜரால் சமண சமயம் விட்டு வைணவ நெறியைத் தழுவினான் என்று 'கொங்கு தேச ராஜாக்கள் சரிதம்' கூறுகின்றது.

இவையெல்லாம் சமண சமயத்தின் செல்வாக்கு சிறிது சிறிதாக மறைந்து வருகின்றதென்பதையும், அதை ஊக்கவும், வளர்த்து ஆதரவு தரவும் கூடியவர்கள் இல்லாதொழிந்தனர் என்பதையும் காட்டுகின்றன. சமணர்களுக்குப் பல வழிகளிலும் எதிர்ப்புகளும் இடையூறுகளும் தோன்றின. பல்லவர் காலத்தில் தோன்றிய சமயப் புரட்சி இந்து சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றது. சமணர்கள் கழுவேற்றப்பட்டார்கள். பாண்டி நாட்டில் இக் கருத்தினை,



'பண்புடை அமைச்ச ரும் பாருளோர் அறியும் ஆற்றால்
கண்புடை பட்டு நீண்ட கழுத்தறி நிரையில் ஏற்ற
நண்புடை ஞானம் உண்டார் மடத்துத்தீ நாடி இட்ட
எண்பெருங் குன்றத் தெண்ணா யிரவரும் ஏறி னார்கள்.'
[பெரிய புராணம். தி. ச. பு. 855]

என்ற பெரிய புராணப் பாடல் விளக்கும்.

போலிச் சமணர்களால் அனல் வாதம், புனல் வாதம் என்ற வாதங்களுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. தத்துவ விசாரங்கள் சமணர்களிடம் குறைந்து விட்டன. அவர்களது திகம்பரத்தன்மை மக்களால் வெறுக்கப் பட்டது. ஞான சம்பந்தரும், அப்பரும் மிகக் கடுமை யாகவும் இழிசொற்களாலும் அவர்களை ஏசி மக்களிடம் மதிப்பிழக்கச் செய்தனர். இவ்வாறாக அரசியல் நிலையி லிருந்தும், சமுதாயத்தினின்றும் அவர்கள் தங்கள் சமயச் செல்வாக்கினையும் இழந்து சீரழியலாயினர்.

# VII பிற்காலத்தில் களப்பாளர்

நாடோடிகளாக வந்த இக் களப்பிரர் தங்களது ஆட்சியும், அரசியலும், சமயமும் எல்லாம் காலவெள்ளத்தில் மூழ்கத் தாழ்ச்சியுற்றுத் தமிழர் தம் வாழ்க்கை முறைகளுடன் இணைந்துவிட்டனர் என்றே சொல்லலாம். அவ்வாறு தமிழர் வாழ்வுடன் இணைந்து தமிழ் நாட்டுப் பகுதிகளில் நிலைத்து வாழத் தலைப்பட்ட காலத்தில்தான் தமிழ் மக்கள் கலாசாரத்துடன் ஒன்றி வேறுபாடுணர முடியாத அளவுக்குக் கலந்து வாழ்கின்ற சூழ்நிலையை அடைகின்றனர்.

பிற்கால அரசர்களிடம் செல்வாக்குப் பெற்று அரசியல் அலுவல்களை ஏற்றும், பணிந்தும் வாழ்ந்தனர். அரசர்கள் 'களப்பாளராசர்' என்ற பட்டம் கொடுத்துச் சிறப்புக்கள் செய்கின்ற அளவுக்குத் தங்கள் செல்வாக்கினை உயர்த்திக் கொண்டனர். சிலர் தமிழ்ப் புலவர்களாகவும், சிலர் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் வள்ளல்களாகவும் இருந்திருக்கின்றனர். பெரு மன்னர்களின் படைகளுக்குத் தலைமை தாங்கித் துணைபுரிந்து வந்திருக்கின்றனர்.

வேளாண் மரபு அவர்களின் சமுதாய வாழ்வில் தனியிடத்தைப் பெற்றதென்றே சொல்லலாம். தமிழ் நாட்டின் வேளாண் மரபில் களப்பிரர்கள் கலந்த பின்னர் களப்பிரரைக் களப்பாளர் என்ற பெயரில் அழைக்கலாயினர். தமிழ் நாட்டுக் களப்பாளர்தான் களப்பிரர்



என்று சிலர் மயங்கித் தலை தடுமாறிக் கூறியுள்ளதையும் நோக்குக. பிற்காலச் சாசனங்கள் 'களப்பாழர்' என்றே அவர்களைக் குறிக்கின்றன.

இவ்வாறு அவர்கள் தமது பழைய செல்வாக்குகளையெல்லாம், இழந்து—மறந்து—புதிய அமைப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வாழத்தலைப்பட்டனர். அவ்வாறு களப்பாளராக வாழ்ந்த ஒரு சில தலைவர்களைப் புராணங்களும், இலக்கிய நூற்களும் குறிப்பிடுகின்றன.

## கூற்றுவ நாயனார்

இவர் பெரிய புராணத்தில் சேக்கிழாரால் பாடப் பெற்ற அரசர். இவர் தம் ஆட்சிக் காலத்தில் உலகெலாம் தமது ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து காவல் செய்தார் என்று அவர் கூறுகின்றார்.

> *'காதற் பெருமைத் தொண்டின் நிலைக்கடல்சூழ்*
> *வையம் காத்தளித்துக்]*
> *கோதங் ககல முயல்களந்தைக் கூற்ற னார்தம் கழல்*
> *வணங்கி...'* (பெரிய புராணம் கூற் : நா : 8)

என்று அவர் தனது நூலில் குறித்துள்ளார்.

> *' ஓதம் தழுவிய ஞாலமெல்லாம் ஒருகோவில் வைத்தான்*
> *கோதை நெடுவேல் களப்பாளன் ஆகிய கூற்றுவனே.'*

எனவே, கூற்றுவ களப்பாளன் உலகைத் தன்னடிக் கீழ்க் கொண்டு ஆண்ட செய்தி தெளிவாக உள்ளது.

## மூர்த்தி நாயனார் காலம்

இவர் சேக்கிழாரால் பெரிய புராணத்தில் பாடப் பெற்ற பாண்டிய மன்னன் ~~கருநட வேந்தன் என்று அவர் குறிக்கின்றார்.~~ இவர் காலத்தில் கருநட வேந்தன் அவர்ம் படையை எடுத்து வந்தான் என்று இயம்புகின்றார். அவ் வேந்தனது பெயர் முதலியன விளங்கவில்லை. எனினும் [redacted]ப்பிட கிடைத்தவைகளை கொண்டாம் என 2ஆகக்

*கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவல்*
*மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள் வானுய்*
*யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்தேர்*
*சேனைக் கடலும் கொடுதென் திசைநோக்கி வந்தான்.'*
(பெரிய புராணம் மூர்த்தி நாயனுர் : 11)

என்பது பாடல். இவர் நால்வகைப் படையும் பரப்பி வடக்கினின்றும் போந்து மதுரையைக் கைப்பற்றி ஆண்டதாகக் கூறுகின்ருர். இவரது மதுரைப் படையெடுப்பினைப் பற்றிப் 'பாண்டிய நாட்டில் களப்பிரர்' என்ற பகுதியில் முன்பும் குறிப்பிட்டோம்.

## சேக்கிழான் பாலருவாயன் களப்பாளராயர்

இவர் பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் பெருமானின் தம்பியாவார். இரண்டாம், மூன்ரும் குலோத்துங்க சோழரது ஆட்சிக் காலத்தில் இவர் அமைச்சராக இருந்தார். இவர் மூன்ரும் குலோத்துங்க சோழனின் இரண்டாவது ஆட்சி ஆண்டில் கோட்டூர்ச் சிவன் கோயிலில் நந்தா விளக்கு எரிய வைக்கப் பொற் காசுகள் நிவந்தமாக அளித்துள்ளார்.

## களப்பாளராசன் நெற்குன்ற வாணன்

இவரது பெயரைக் கொண்டே இவர் 'நெற்குன்றம் என்ற ஊருக்குத் தலைவராக இருந்தார் என்பதை அறியலாம். இவர் குலோத்துங்கன் காலத்தவர். சிறந்த வள்ளலாகவும், புலவராகவும், நல்ல ஒழுக்கசீலராகவும் விளங்கியவர். சோழனது ஆட்சிக் காலத்தில் எழுந்த திருப்புகலூர்க் கல்வெட்டு இச்செய்திகளைத் தெரிவிக்கின்றது.

இவர் இக்கோயிலில் குடி கொண்டிருக்கும் இறைவன் மீது ஒரு அந்தாதி பாடியுள்ளார். அவ்வந்



தாதியின் இறுதியில் அந்நூலைப் பாடினவன் நெற்குன்ற வாணன் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

*' களப்பாளன் நெற்குன்ற வாணன் அந்தாதிக் கலித்*
*துறையே.*

என்ற வரியினைக் கொண்டு அச்செய்தியைத் தெளியலாம்.

இவரது அரும்பெரும் பண்புகளை விளக்க வந்த புலவர் புராண ஆசிரியர் குமணன், தெள்ளா றெறிந்த நந்தி வர்மன் ஆகிய மன்னர்களுடன் ஒப்பிட்டுப் பாடுகின்ருர்.

*' தலைகொடுத்த குமணனிலும் உயிர்கொடுத்த நந்தி*
*யிலும் தமிழ்காத்தான் போய்*
*விலைபடுமிந் நெற்குன்ற வாணனைமேல் எனத்துணிந்து*
*விளம்ப லாகி*
*நிலைபொறுத்த புலமையுற்று மானத்தும் புகழ் பெரிதா*
*நினைத்தாலும்*
*கலையுணர்ச்சி சிறிதுறினும் இனத்தொடிகல்கொடுங்*
*குணமும் கடந்தானம்மா.*

என்று அவனது தமிழ்ப்பற்றின் பெருமையினைச் சிறப்பித்துப் பாடிச் சென்றுள்ளார்.

## களப்பாள ராசன் சாலை

திருப்புகலூர்க் கல்வெட்டு, களப்பாள ராஜர் என்பார் சாலை செய்வித்தார்என்றும், அங்குப் பிராமணர்கள் உண்பதற்காகச் சாலைப்புறமாக இறையிலி நிலம் அளித்தார் என்றும் கூறுகின்றது. இதைச் செய்த களப்பாளராசன் நெற்குன்ற வாணன். ஆதியில் களப்பிரர் தமிழரசர்களால் கொடுக்கப்பட்ட பிரம தேயங்களைக் கைப்பற்றிக் கொண்டனர் என்று வேள்விக்குடி சாசனம் கூறுகிறது.

*'அளவரிய ஆதிராசரை அகலநீக்கி அகலிடத்தைக்*
*களப்ரன் என்னும் கலியரைசன் கைக் கொண்டதனை*
*'இறக்கியபின்'*

என்ற வேள்விக்குடிச் சாசனப் பகுதி ஈண்டு ஒப்பு நோக்கற் பாலதே.

### அச்சுத களப்பாளர்

இவர் மேற்கூறிய அச்சுத களப்பாளனிலும் வேறு பட்டவர். இவரது காலம் கி.பி. 12ஆம் நூற்றுண்டு. சிவஞானபோதம்எழுதியமெய்கண்டாரின் தந்தையாவர். எனவே, மெய்கண்டாரையும் இக்குலத்தவராகவே கொள்ள இடமேற்படுகிறது. சமண சமய தத்துவங் கொண்ட பழைமையினையும் சைவ சித்தாந்த நெறிகண்ட இக்காலச் சூழ்நிலையினையும் ஒப்பு நோக்கி உணர்க.

### முடிவு

இது காறும், களப்பிரர்கள் எவ்வாறு மொழி பெயர் தேயத்து வேங்கடத்தும்பர் கருநடநாட்டின் அரசியல் செல்வாக்கினைப் பெற்றுச் சிறப்புற்றும், பின் பல்வேறு அரசியல் சூழலில் தங்களை இழந்து தமிழ் மக்களுடன் கலந்து தமிழ் நாட்டில் சங்கமம் ஆயினர் என்பதையும், இதேபோலச் சமண சமயமும் எவ்வாறு நிலைபெற முடியாமல் போயிற்று என்பதையும் ஒருவாறு ஆராய்ந்து கூறினோம்.

## பிற்சேர்க்கை

முச்சங்க வரலாற்றைத் தெரிவிக்கும் ஒரு பழைய பாடல்.

*"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவத்து*
*இந்நான் கெல்லையின் இருந்தமிழ் பயின்ற*
*செந்நாப் புலவர் செய்தி யீண்டுரைப்பின்,"*

### தலைச் சங்கம்

*ஆடகக் குடுமி மாடக் கூடலின்*
*முன்னர்ச் சங்கக் கன்மாப் பலகையில்*
*திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள்*
*மன்றன் மராத்தார்க் குன்றெறி யிளஞ்சேய்*
*திண்டிறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி*
*புவிபுகழ் மருதங் கவினிய முரஞ்சிப்*
*பதிமுடி நாகன் நிதியின் கிழவன்*
*இனையர் நானூற்றுநாற் பத்தொன் பதின்மர்*
*அனையர் நாலுன் காயிர நூற்றெருடு*
*நாற்பத் தொன்பதின்மர் பார்க்கிற் செந்தமிழோர்*
*புரிந்தன செய்யுட் பெரும்பரி பாடலும்*
*முதுமை யடுத்த நாரையுங் குருகும்*
*கதியுறச் செய்த களரியா விரையும்*
*ஆங்கவ ரிருந்ததும் அத்தொகை யாகும்.*
*ஈங்கிவர் தம்மை யிரீஇய பாண்டியர்கள்*
*காய்சின வழுதிமுதற் கடுங்கோ னீரு*

ஏசி லாவகை யெண்பத் தொன்பதின்மர்
கவியரங் கேறினா ரெழுவ ராகும்
மகத்துவ முடைய அகத்தியம் இலக்கணம்

## இடைச் சங்கம்

வடுவறு காட்சி நடுவட் சங்கத்து
அகத்தியர் தொல்காப்பியத் தமிழ் முனிவர்
இருந்தை யூரிற் கருங்கோழி மோசியார்
எள்ளாப் புலமை வெள்ளூர்க் காப்பியன்
இறவா இசையிற் சிறுபாண்ட ரங்கன்
தேசிக மதுரை யாசிரியன் மாறன்
தவரொப் பாய துவரைக் கோமான்
தேருங் கவிபுனை கீரந்தை யாரிவர்
ஒன்ப தோடடுத்த வைம்பதின்ம ராகும்
தவலருங் கேள்வித் தன்மைய ருள்ளிட்டு
இவர்மூ வாயிரத் தெழுநூற் றுவரே
வையகம் பரவச் செய்த செய்யுளும்
இருங்கலி கடிந்த பெருங்கலித் தொகையொடு
குருகு வெண்டாளி தெருள் வியாழமாலை
அந்நா ளிலக்கணம் அகத்திய மதனொடு
பின்னாட் செய்த பிறங்கு தொல்காப்பியம்
மதிநலங் கவின்ற மாபுராணம்
புதுநலங் கனிந்த பூத புராணம்
வல்லிதி னுணர்ந்த நல்லிசை நுணுக்கம்
தாவாக் காலம் தமிழ்பயின் றதுவும்
மூவா யிரத்தோ டெழுநூற் றியாண்டு
பரீஇய சங்கம் இரீஇய பாண்டியர்கள்
வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு
திண்டேர்க் கொற்ற முடத்திரு மாறன்
முரசுடைத் தானை மூவா வந்தம்
அரசுநிலை யிட்டோ ரைம்பத்தொன் பதின்மர்
இவ்வகை யரசரிற் கவியரங் கேறினர்
ஐவகை யரச ராயிடைச் சங்கம்



விண்ணகம் பரவு மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப.

## கடைச்சங்கம்

அருங்கடைச் சங்க மிருந்தோர் யாரெனிற்
சிறுமே தாவியார் சேந்தம் பூதனார்
அறிவுடை யரனார் பெருங்குன் றூர்கிழார்
பாடல் சான்ற விளந்திரு மாறன்
கூடலா சிரியர் நல்லந் துவனார்
பரவுதமிழ் மதுரை மருதனிள நாகர்
அவிர்கணக் காயர் நவினக் கீரர்
கீரங் கொற்றர் கிளர்தே னூர்கிழார்
ஓருங் கலைமண லூரா சிரியர்
நல்லூர்ப் புளியங் காய்ப்பெருஞ் சேந்தர்
செல்லூ ராசிரியர் முண்டம் பெருங்குமரர்
முசிறியா சிரியர் நீல கண்டனார்
அசைவிரி குன்றத் தாசிரிய ரன்றி
நாத்தலங் கனிக்குஞ் சீத்தலைச் சாத்தர்
முப்பா லுணரும் உப்பூரி குடிகிழார்
உருத்திர சன்மர் மருத்துவ ராகிய
நாம நாற்கலைத் தாமோ தரனார்
மாதவ ளனாரோ டோதுமிள நாகர்
கூடியுங் காமப் படியங் கொற்றனார்
அருஞ்செய லூர்வாழ் பெருஞ்சுவ னாருடன்
புவிபுகழ் புலமைக் கபிலர் பரணர்
இன்னாத் தடிந்த நன்னாக ரன்றியும்
ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்துக்
குரையிடை யிட்ட விரகர் கல்லாடர்
பேர்மூல முணரு மாமூலர் தம்மொடு
விச்சை கற்றிடு நச்செள்ளை யார்முதல்
தேனூற் றெடுப்பச் செந்தமிழ் பகர்ந்தோர்
நானூற் றுவர்முத னாற்பத்தொன் பதின்மர்

ஏசி லாவகை யெண்பத் தொன்பதின்மர்
கவியரங் கேறினு ரெழுவ ராகும்
மகத்துவ முடைய அகத்தியம் இலக்கணம்

## இடைச் சங்கம்

வடுவறு காட்சி நடுவட் சங்கத்து
அகத்தியர் தொல்காப்பியத் தமிழ் முனிவர்
இருந்தை யூரிற் கருங்கோழி மோசியார்
எள்ளாப் புலமை வெள்ளூர்க் காப்பியன்
இறவா இசையிற் சிறுபாண்ட ரங்கன்
தேசிக மதுரை யாசிரியன் மாறன்
தவரொப் பாய துவரைக் கோமான்
தேருங் கவிபுனை கீரந்தை யாரிவர்
ஒன்ப தோடடுத்த வைம்பதின்ம ராகும்
தவலருங் கேள்வித் தன்மைய ருள்ளிட்டு
இவர்மூ வாயிரத் தெழுநூற் றுவரே
வையகம் பரவச் செய்த செய்யுளும்
இருங்கலி கடிந்த பெருங்கலித் தொகையொடு
குருகு வெண்டாளி தெருள் வியாழமாலை
அந்நா ளிலக்கணம் அகத்திய மதனெடு
பின்னுட் செய்த பிறங்கு தொல்காப்பியம்
மதிநலங் கவின்ற மாபுராணம்
புதுநலங் கனிந்த பூத புராணம்
வல்லிதி னுணர்ந்த நல்லிசை நுணுக்கம்
தாவாக் காலம் தமிழ்பயின் றதுவும்
மூவா யிரத்தோ டெழுநூற் றியாண்டு
பரீஇய சங்கம் இரீஇய பாண்டியர்கள்
வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு
திண்டேர்க் கொற்ற முடத்திரு மாறன்
முரசுடைத் தானை மூவா வந்தம்
அரசுநிலை யிட்டோ ரைம்பத்தொன் பதின்மர்
இவ்வகை யரசரிற் கவியரங் கேறினர்
ஐவகை யரச ராயிடைச் சங்கம்



விண்ணகம் பரவு மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப.

## கடைச்சங்கம்

அருங்கடைச் சங்க மிருந்தோர் யாரெனிற்
சிறுமே தாவியார் சேந்தம் பூதனர்
அறிவுடை யரனர் பெருங்குன் றூர்கிழார்
பாடல் சான்ற விளந்திரு மாறன்
கூடலா சிரியர் நல்லந் துவனர்
பரவுதமிழ் மதுரை மருதனிள நாகர்
அவிர்கணக் காயர் நவினக் கீரர்
கீரங் கொற்றர் கிளர்தே னூர்கிழார்
ஒருங் கலைமண லூரா சிரியர்
நல்லூர்ப் புளியங் காய்ப்பெருஞ் சேந்தர்
செல்லூ ராசிரியர் முண்டம் பெருங்குமரர்
முசிறியா சிரியர் நீல கண்டனர்
அசைவிரி குன்றத் தாசிரிய ரன்றி
நாத்தலங் கனிக்குஞ் சீத்தலைச் சாத்தர்
முப்பா லுணரும் உப்பூரி குடிகிழார்
உருத்திர சன்மர் மருத்துவ ராகிய
நாம நாற்கலைத் தாமோ தரனர்
மாதவள னரோ டோதுமிள நாகர்
கடியுங் காமப் படியங் கொற்றனர்
அருஞ்செய லூர்வாழ் பெருஞ்சுவ னருடன்
புவிபுகழ் புலமைக் கபிலர் பரணர்
இன்னுத் தடிந்த நன்னுக ரன்றியும்
ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்துக்
குரையிடை யிட்ட விரகர் கல்லாடர்
பேர்மூல முணரு மாமூலர் தம்மொடு
விச்சை கற்றிடு நச்செள்ளை யார்முதல்
தேனூற் றெடுப்பச் செந்தமிழ் பகர்ந்தோர்
நானூற் றுவர்முத னற்பத்தொன் பதின்மர்

கடைச்சங்க நூற்கள்

*பீடுபெற வுலகிற் பாடிய செய்யுள்*
*முத்தொள் ளாயிர நற்றிணை நெடுந்தொகை*
*அகநா னூறு புறநா னூறு*
*குறுந்தொகை சிற்றிசை பேரிசை வரியோ*
*டறம்புகல் பதிற்றுப்பத் தைம்பதோ டிருபான்*
*பெரும்பரி பாடலுங் குறுங்கலி நூற்றைம்*
*பதுமுத லாகிய நவையறுங் கலைகள்*
*அக்கா லத்தவர்க் ககத்திய மதனொடு*
*மிக்கா மிலக்கணம் விளங்குதொல் காப்பியம்*
*எண்ணூற் கேள்விய ரிருந்த தாயிரத்*
*தெண்ணூற் றைம்பது வருட மென்ப*
*இடர்ப்படா திவர்களைச் சங்க மிரீஇயினர்*
*முடத்திரு மாறன் முதலா வுக்கிரப்*
*பெருவழுதி யீறுப் பிறங்கு பாண்டிய*
*நரபதி களாகு நாற்பத்தொன் பதின்மர்*
*இவருட் கவியரங் கேறினர் மூவர்*
*புவியிற் சங்கம் புகழ்பட மதுரை*

உரை தோன்றக் காரணம்

*ஆதிமுச் சங்கத் தருந்தமிழ்க் கவிஞர்*
*ஓதிய செய்யு ளுலவாப் பெரும்பொருள்*
*வாளாக் கேட்குந் தோளாச் செவிக்கும்*
*கேட்டுத் தெரியா வோட்டைநெஞ் சினுக்கும்*
*நுழையா வாதலி னுழைபுலன் தன்னொடும்*
*விழைவார்க் குரைக்க வேண்டுவர் தெரிந்தே.''*

இச்செய்யுள் பாண்டி நாட்டிலுள்ள செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டிலிருந்த பழைய ஏட்டுப் புத்தக மொன்றில் எழுதப் பட்டிருந்தது.

[உ.வே. சாமிநாதையர் பதிப்பு : சிலப்பதிகாரம் 8ஆம் பதிப்பு, 1968-பக்கம் 7-8.]



## முச்சங்கப் புலவர்கள்

### முதற் சங்கம்

**இடம்** : கூடல்

**புலவர்கள்** : திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள்
இளஞ் சேய்
குண்டிகைக் குறுமுனி [அகத்தியன்]
முரஞ்சிப்பதி முடிநாகன்
நிதியின் கிழவன்

**செய்யுள் நூல்கள்** : பரிபாடல்
முதுநாரை
முதுகுருகு
களரியா விரை

**இலக்கணம்** : அகத்தியம்

**இரீஇய பாண்டியர்கள்** : காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை 89 பேர்

**கவியரங் கேறியவர்கள்** : 7 பேர்

### இடைச் சங்கம்

**இடம்** : கபாடபுரம்

**புலவர்கள்** : அகத்தியர்
தொல்காப்பியர்
இருந்தையூர்க்கருங்கோழி மோசியார்
வெள்ளூர்க் காப்பியன்
சிறுபாண்டரங்கன்
மதுரையாசிரியன் மாறன்
துவரைக் கோமான்
கீரந்தையார்

செய்யுள் நூல்கள் : கலித்தொகை
குருகு
வெண்டாளி
வியாழமாலை

இலக்கணம் : அகத்தியம்
தொல்காப்பியம்
மாபுராணம்
பூதபுராணம்
இசை நுணுக்கம்

இரீஇய பாண்டியர்கள் : வெண்டேர்ச் செழியன் முதல்முடத் திருமாறன் வரை 50 பேர்

கவியரங் கேறியவர்கள் : 5 பேர்

**கடைச்சங்கம்**

இடம் : வட மதுரை [இன்றைய மதுரை]

புலவர்கள் : சிறு மேதாவியார்
சேந்தம் பூதன்
அரஞர்
பெருங்குன்றூர் கிழார்
இளந் திருமாறன்
கூடலாசிரியர் நல்லந்துவஞர்
மதுரை மருதனிள நாகன்
கணக்காயர்
நக்கீரர்
கீரன் கொற்றன்
தேனூர் கிழார்
மணலூர் ஆசிரியர்
நல்லூர்ப் புளியங்காய்பெருஞ்சேந்தர்
செல்லூர் ஆசிரியர் முண்டம் பெருங் குமரர்



முசிரி ஆசிரியர் நீலகண்டஞர்
குன்றத்தாசிரியர்
சீத்தலைச் சாத்தர்
உப்பூரிகுடி கிழார் உருத்திரசன்மர்
மருத்துவர் தாமோதரஞர்
மாதவளஞர்
இளநாகர்
படியங் கொற்றஞர்
செயலூர் பெருஞ்சுவஞர்
கபிலர்
பரணர்
நன்ஞகர்
கல்லாடஞர்
மாமூலஞர்
நச் செள்ளையார்

செய்யுள் நூல்கள் : முத்தொள்ளாயிரம்
நற்றிணை
நெடுந் தொகை
அகநானூறு
புறநானூறு
குறுந்தொகை
சிற்றிசை
பேரிசை
வரி
பதிற்றுப் பத்து
இருபது பரிபாடல்
குறுங்கலி நூற்றைம்பது

இலக்கணம் : அகத்தியம்
தொல்காப்பியம்

இரீஇய பாண்டியர்கள் : முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி ஈருக 49 பேர்

கவியரங் கேறியவர்கள் : 3 பேர்

## வேள்விக்குடிச் செப்பேடுகள்

'வேள்விக்குடிச் செப்பேடுகள்' இந்தியக் கல்வெட்டு பதினேழாம் தொகுதியில் பதினாறாவது எண்ணாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன[1]. இதை ஆங்கில எழுத்தாக்க முறையில் பதிப்பித்தவர் எச். கிருஷ்ண சாஸ்திரி, பி.ஏ., ஆவார். இதை எஸ். இராஜம் நூல் வெளியீட்டுக் குழுவினர் 'சாசனமாலை' என்ற சிறு நூலில் வெளியிட்டுள்ளனர்[2]. காலஞ்சென்ற திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார் தமது 'பாண்டியர் வரலாறு' என்னும் நூலில் சேர்க்கை 1'இல் பதிப்பித்துள்ளார்[3]. இவைகள் அனைத்தும், செப்பேட்டினை வெளியிட்டு உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்ற நோக்கமும், வரலாற்றுக்குத் துணையாக அமைந்திருப்பதைக் காட்டும் நோக்கமும் உடையன.

எனவே, அவர்கள் சாசனத்தின் செய்யுள் நடையினை அவ்வளவு கருதவில்லை. தமிழ்ச் செய்யுள் எட்டாவது நூற்றாண்டில் எவ்வாறு அமைந்திருந்தது, அது சாசனங்களில் பெற்றிருந்த இடம் எத்தகையது என்பதையெல்லாம் ஆராய்வதற்கு இச்சாசனம் ஒரு சிறந்த கருவியாக மிளிருகிறது.

இச்சாசனம் காட்டுகின்ற அரச வழியினர், போர் நிகழ்ச்சிகள் முதலியவற்றையும், அரசு முறையினையும் கூர்ந்து நோக்கினால் எட்டாம் நூற்றாண்டு வரையுள்ள தமிழ்நாட்டு வரலாற்றினை மிகத் தெளிவாக உணரலாம். இச் சாசனத்தின் வரலாற்றுச் சிறப்பினையும் நன்கு உணரலாம்.

இவ்வாறான பல தெளிவுகளுக்காகச் சாசனத்தைப் பல பகுதிகளாகத் தலைப்பிட்டுள்ளேன்.

முதல் பகுதி, சங்ககாலப்பாண்டியன் என்று கருதப் படுகின்ற பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி[4]



என்பான் வேள்வி செய்வதற்காகக் கொற்கைக் கிழானை நற்கொற்றன் என்பானுக்குப் 'பாகனூர்'[5] என்ற செழிப்பு மிக்க ஊரை 'வேள்விக்குடி' என்று பெயரிட்டுத் தானம் செய்ததையும், பின்னர் 'களப்பிரர்'[6] என்ற ஓர் இனத்தவர் நாட்டினைக் கைப்பற்றிக் கொள்ள, அந்தத் தானம் பறிக்கப்பட்டதையும் கூறுகின்றது.

அடுத்த பகுதி, கி. பி. 575 முதல் 700 வரை ஆண்ட பாண்டிய மன்னர்களின் பரம்பரையையும், அவர்கள் சேர, சோழ, பல்லவ, சாளுக்கிய மன்னரோடும், சிறு தலைவர்களோடும் செய்த போர்களைப் பற்றியும், அவர்கள் செய்த தானச் செய்திகள் முதலியவற்றைக் குறித்தும் கூறுகிறது. இந்தப் பகுதியே வரலாற்றுக்கு இன்றியமையாத பகுதியாகும்.

பின்னர் வருகின்ற பகுதி, நெடுஞ்சடையனது மூன்றாவது ஆட்சியாண்டில் 'காமக்காணி நற்சிங்கன்' என்பவன் பழைமையதான அந்தக் கொடைக்கு உரிமை கோரி முறையிடுவதையும் அதற்கு அரசன் சான்று காட்டும்படி கூற, அவனும் அரசனது ஆணையின்படி சான்று காட்டிட மன்னன் மகிழ்ந்து, தம் முன்னோர் கொடுத்தபடியே எல்லா வகையான உரிமைகளோடும் தாரை வார்த்துக் கொடுத்ததையும் கூறுகின்றது.

அதன்பின், தானம் செய்த நிலத்தின் எல்லைகளை வரையறுக்கின்ற செய்தியையும், இந்தத் தானத்தைச் செயல் படுத்தித் தந்தவன் நெடுஞ்சடையனது அமைச்சன் 'மாறங் காரி'[7] என்பதையும் கூறுகின்றது.

இறுதியில் தானத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டியவர்கள் இன்னின்னார் என்பதையும், அளவினையும் இச்சாசனத்தை எழுதியவன் பெயரையும் காணலாம்.

## குறிப்புக்களும் விளக்கங்களும்

1. Epigraphia Indica Volume 17, No. 16
2. சாசனமாலை; பக்: 7, எஸ். இராஜம், 5, தம்புச செட்டித் தெரு, சென்னை-1. [1960]
3. பாண்டியர் வரலாறு, பக்: 193, 5ஆம் பதிப்பு T. V சதாசிவ பண்டாரத்தார் [1966]
4. பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி

இவனைப் பாடுவன வாகப் புறநானூற்றில், 5 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.இவன் யாகம் பல செய்தவன் என்பதைப் புறம் 15ஆவது பாடலில் நெட்டிமையார் என்ற புலவர் குறிப்பிடுகின்றார். மதுரைக் காஞ்சியிலும் இவனைப் பற்றிய குறிப்பு உள்ளது. இலக்கியச் சான்றுகள் கொண்டு அறியலாகும். பாண்டிய அரசர்களுள் தொன்மைசான்றவன் இவனே.

5. பாகனூர்

தொன்மைப் பெருமை வாய்ந்தது. கி.பி. 2ஆம் நூற்றாண்டுப் பிராமித் தமிழ்க் கல்வெட்டுகளில் இப்பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. இன்றைய பாகனேரியே பண்டு பாகனூர் என வழங்கப்பட்டது.

6. களப்பிரர்

கடைச் சங்க காலத்துக்குப் பின் கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் ஆட்சி செய்தவர்கள். இவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டின் நிலை, தமிழ் மொழியின் நிலை, தமிழ் மன்னர்களின் நிலை யாவும் விளக்க மற்றுக் கிடந்தன. இவர்களைப் பற்றி ஒரு தெளிவான செய்தியும் கிட்டிற்றில்லை. அதனால் அக்காலப் பகுதியைத் தமிழ் நாட்டின் இருண்ட காலம் என்பர்.

7. மாறங்காரி

இவன் களக்குடி (இன்றைய களக்காடு) நாட்டைச் சார்ந்தவன். வைத்தியகுலத்தில் பிறந்தவன்.பாண்டியன் நெடுஞ்சடையனது அமைச்சனும், சேனாதிபதியு மாவான். இவன் மதுரை நரசிங்கபுரத்தில் ஒரு கற்கோயில் கட்டத் தொடங்கி அது முடியாத போதே இறந்து பட்டான், பின் அவன் தம்பி மாறன் எயினன் அப்பணியைச் செய்து முடித்தான் என்று ஆனைமலைக் கல்வெட்டுக் கூறுகின்றது.



## சாசனப் பகுதி

### தானத்தின் வரலாறு

'கொல்யானை பல ஓட்டிக் கூடாமன்னர் குழாம் தவிர்த்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியாதி ராஜனால் நாகமாமலர்ச் சோலை நளிர்சினை மிசை வண்டலம்பும் பாகனூர்க் கூற்றம் என்னும் பழனக் கிடக்கை நீர்நாட்டுச் சொற்கண்ணாளர் சொலப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாத கொற்கைகிழான் நற்கொற்றன் கொண்டவேள்வி முற்றுவிக்கக் கேள்வி அந்தணாளர் முன் 'கேட்க' என்றெடுத்துரைத்து வேள்விக் சாலை முன்பு நின்று 'வேள்விக்குடி' என்று அப்பதியைச் சீரோடு திருவளரச் செய்தார் வேந்தன் அப்பொழுதேய் நீரோடு அட்டிக் கொடுத்தமையால் நீடு புக்தி துய்த்தபின் அளவரிய ஆதிராஜரை அகல நீக்கி அகலிடத்தைக் களப்ரன் என்னும் கலியரைசன் கைக் கொண்டதனை இறக்கிய பின்—

### பாண்டியர்கள்

#### கடுங்கோன்

படுகடன் முளைத்த பருதி போல
பாண்டியாதி ராஜன் வெளிப்பட்டு
விடுகதிர் அவிரொளி விலக வீற்றிருந்து
வேலைசூழ்ந்த வியலிடத்துக்
கோவும் குறும்பும்
பாவுடன் முருக்கிச்
செங்கோல் ஓச்சி வெண்குடை நீழல்
தங்கொளி நிறைந்த தரணி மங்கையைப்
பிறர்பால் உரிமை
திறவிதின் நீக்கித்
தன்பால் உரிமை
நன்கனம் அமைத்த
மானம் பேர்த்த
தானை வேந்தன்

ஒடுங்கா மன்னர் ஒளிநகர் அழித்த
கடுங்கோன் என்னும் கதிர்வேல் தென்னன்

## மாறவர்மன் அவனி சூளாமணி

மற்றவர்க்கு மகனாகி மஹீதலம் பொது நீக்கி
மலர்மங்கையொடு மணன் அயர்ந்த
அற்றம்இல் அடல்வேல் தானை
ஆதிராஜன் அவனி சூளாமணி
எத்திறத்தும் இகல் அழிக்கும்
மத்தயானை மாறவர்மன்

## சேந்தன் செழியன்

மற்றவர்க்கு மருவினிய ஒருமகனாகி
மண்மகளை மருக்கடிந்து
விக்ரமத்தின் வெளிற்பட்டு விலங்கல் வேல்பொறி
வேந்தர் வேந்தன்
சிலைத் தடக்கைக்
கொலைக் களிற்றுச்
செழியன் வானவன்
செங்கோற் சேந்தன்.

## மாறவர்மன் [கூன்பாண்டியன்]

மற்றவர்க்குப்

பழிப் பின்றி
வழித் தோன்றி
உதயகிரி மத்யமத்து உறுசுடர் போலத்
தெற்றென்று திசைநடுங்க
மற்றவன் வெளிற்பட்டுச்
சூழி யானை செலவுந்திப்
பாழிவாய் அமர்கடந்து
வில்வேலிக் கடற்றானையை
நெல்வேலிச் செருவென்றும்
விரவி வந்து அடையாத



பரவரைப் பாழ் படுத்தும்
அறுகால் இனம் புடைதிளைக்கும்
குறுநாட்டவர் குலங் கெடுத்தும்
கைந்நலத்த களிறுந்திச்
செந்நிலத்துச் செருவென்றும்
பாரளவுந் தனிச் செங்கோல்
கேரளனைப் பலமுறையும்
உரிமைச் சுற்றமோடு அவர் யானையும்
புரிசைம் மதில் புலியூர்
பகல் நாழிகை இறவாமை
இகலாழியுள் வென்று கொண்டும்
வேலாழியும் வியன் பறம்பும்
ஏலாமை சென்று எறிந்தழித்தும்
ஹிரண்ய கர்ப்பமும் துலாபாரமும்
தரணிமிசைப் பல செய்து
அந்தணர்க்கும் அசக்தர்க்கும்
'வந்தணைக!' என்று ஈத்தளித்த
மகரிகை அணிமணி நெடுமுடி
அரிகேசரி அசமசமன் ஸ்ரீமாறவர் மன்

## கோச்சடையன் ரணதீரன்

மற்றவர்க்கு மகனாகிக்
கொற்றவேல் வலன் ஏந்தி
பொருதூரும் கடல் தானையை
மருதூருள் மாண்பழித்து
ஆம்வேளை அகப்பட
'ஏய்' என்னுமை எறிந்தளித்து
செங்கொடியும் புதான் கோட்டும்
செருவென்றவர் சினம் தவிர்த்துக்
கொங்கலரும் நறும் பொழில் வாய்க்
குயிலோடு மயிலகவும்
மங்கலபுரம் என்னும் மஹா நகருள்
மஹாரதரை எறிந்தழித்து

அறைகடல் வளாகம்
பொது மொழி அகற்றி
சிலேயும் புலியும் கயலும் சென்று
நிலேயமை நெடுவரை இடவயிற் கிடாய்
மண்ணினிது ஆண்ட
தண்ணளிச் செங்கோல்
தென்ன வானவன் செம்பியன் சோழன்
மன்னர் மன்னன் மதுரகரு நாடகன்
கொல்நவின்ற நெடுஞ்சுடர் வேல்
கொங்கர் கோமான் கோச்சடையன்

## மான் தேர் மாறன்

மற்றவர்க்குப் புத்ரனுய் மண்மகளது பொருட்டாக
மத்தயானே செலவுந்தி மானவேல் வலன்ஏந்திக்
கடுவிசையால் எதிர்த்தவரை
நெடுவயல்வாய் நிகர் அழித்துக்
கருவடைந்த மனத்தவரைக்
குறுமடைவாய்க் கூர்ப்பழித்து
மண்ணிக் குறிச்சியும் திருமங்கையும்
முன்னின்றவர் முரண் அழித்து
மேவலோர் கடற்ருனேயோடு ஏற்றெதிரேய் வந்தவரைப்
பூவலூர்ப் புறங் கண்டும்
கொடும்புரிசை நெடுங்கிடங்கின் கொடும் பாளூர்க் கூடார்
கடும் பரியும் கருங்களிறும் கதிர்வேலிற் கைக்கொண்டும்
செழும்புரவிப் பல்லவனேக்
குழும்பூருள் தேசழிய
எண்ணிறந்த மால்களிறும்
இவுளிகளும் பலகவர்ந்தும்
தரியலராய்த் தரித்தவரைப்
பெரியலூர்ப் பீடழித்தும்
பூவிரியும் பொழிற் சோலேக்
காவிரியைக் கடந் திட்டு



அழகமைந்த வார்சிலேயின்
மழகோங்கம் அடிப் படுத்தும்
ஈண் டொளிய மணிஇமைக்கும் எழில்- அமைந்த நெடும்புரிசைப்
பாண்டிக் கொடுமுடி சென்றெய்தி பசுபதியது- பன்மபாதம் பணிந்தேத்திக்
கனகராசியும் கதிர்மணியும்
மனமகிழக் குடுத்திட்டும்
கொங்கரவ நறுங்கண் ணிக்
கங்க ராஜனெடு சம்பந்தம் செய்தும்
எண்ணிறந்தன கோசஹஸ்ரமும் ஹிரண்ய கர்ப்பமும்- துலாபாரமும்
மண்ணின்மிசைப் பலசெய்து மறை நாவிஞேர்- குறைதீர்த்தும்
கூடல் வஞ்சி கோழி என்னும்
மாட மாமதில் புதுக்கியும்
அறை கடல் வளாகம்
குறையாது ஆண்ட
மன்னர் மன்னன்
தென்னவர் மருகன்
மான வெண்குடை
மான்தேர் மாறன்;

## பராந்தக நெடுஞ்சடையன்

மற்றவற்கு மகனுகி மால் உருவின் வெளிப்பட்டு
கொற்றம் மூன்றுடன் இயம்ப குளிர்வெண் குடை மண்காப்ப
பூமகளும் புலமகளும்
நாமகளும் நலன் ஏத்த
கலியரைசன் வலிதளரப்
பொலிவினெடு வீற்றிருந்து
கருங்கடல் உடுத்த
பெருங்கண் ஞாலத்து
நாற்பெரும் படையும்

பார்படப் பரப்பிக்
கருதாது வந்து எதிர்மலைந்த
காடவனைக் காடடையப்
பூவிரியும் புனற் கழனிக்
காவிரியின் தென்கரை மேல்
தண்ணுக மலர்ச் சோலைப்
பெண்ணு கடத்து அமர்வென்றும்
தீவாய் அயில் ஏந்தித் திளைத் தெதிரேய் வந்திறுத்த
ஆய் வேளையும் குறும்பரையும் அடல் அமருள் அழித்
தோட்டிக்
காட்டுக் குறும்பு சென்றடைய
நாட்டுக் குறும்பில் செருவென்றும்
அறைகடல் வளாகம் ஒரு மொழி கொளீஇ
சிலைமலி தடக்கைத் தென்ன வானவன்
அவனேய் ஸ்ரீவரன் ஸ்ரீமனோகரன்
சினச் சோழன்
புனப் பூழியன்
வீத கல்மஷன் வினய விஸ்ருதன்
விக்ரம பாரகன் வீரபுரோகன்
மருத்பலன் மான்ய சாசனன்
மனுபமன் மார்த்தித வீரன்
கிரிஸ்திரன் கீதிகின்னரன்
க்ரிபாலயன் க்ரிதாபதானன்
கலிப்பகை கண்டக நிஷ்டூரன்
கார்ய தத்ஷிணன் கார்முக பார்த்தன்
பராந்தகன் பண்டித வத்ஸலன்
பரிபூர்ணன் பாபபீரு
குரையறு கடல் படைத்தானை குணக்ரிஹ்யன் கூட
நிர்ணயன்
நிரையுறு மலர்மணி நீண்முடி நேரியர்கோன் நெடுஞ்
சடையன்
மற்றவன் தன் ராஜ்ய வத்ஸரம் மூன்றாவது செலா
நிற்ப



## பழைய கொடைக்குப் புதிய உரிமை

ஆங்கு ஒருநாள்
மாட மாமதில் கூடல்
பாடு நின்றவர் ஆக்ரோதிக்கக்
கொற்றவனே மற்றவரைத்
தெற்றென நன்கு கூவி,
'என்னேய் நும்குறை' என்று
முன்னுகப் பணித்தருள,
''மேல்நாள் நின்குரவரால்
பால் முறையின் வழுவாமை
மாகம் தோய்மலர்ச் சோலைப்
பாகனூர்க் கூற்றத்துப் படுவது
ஆள்வதானை அடல்வேந்தேய்
'வேள்விகுடி' என்னும் பெயருடையது
ஒல்காத வேல்தானையோடு ஓதவேலி உடன்காத்த
'பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி' என்னும் பரமேஸ்
வரனால்
வேள்விகுடி என்னப் பட்டது
கேள்வியில் தரப்பட்டதனை
துளக்கம் இல்லாக் கடல்தானையாய்
'களப்ரரால்' இறக்கப்பட்டது
என்று நின்று அவன் விஜ்ஞாப்யஞ் செய்ய
'நன்று நன்று' என்று முறுவலித்து,
'நாட்டால் நின்பழமை யாதல் காட்டி நீ கொள்க'
என்ன
நாட்டால் தன்பழமை யாதல் காட்டினன் அங்கப்
பொழுதேய் காட்ட
''மேனாள் எங்குரவரால்
பான்முறையின் தரப்பட்டதை
எம்மாலும் தரப்பட்டது'' என்று
செம்மாந்து அவன் எடுத்தருளி
விற்கைத் தடக்கை விறல்வேந்தன்
கொற்கை கிழான் காமக் காணி நற்சிங்கற்குத்

தேரோடுங் கடல்தானையான்
நீரோடு அட்டுக் கொடுத்தமையின்

## எல்லை

மற்றிதற்குப் பெருநான்கு எல்லை
தெற்றென விரித்து ரைப்பின்
புகரறு பொழின் மருங்குடுத்த
நகரூர் எல்லைக்கும் மேக்கும்
மற்றிதற்குத் தென் னெல்லை
குளந்தைவங் கூழ்வந்தை செய்க்கும்
களந்தைக் குளத்தில் ஆலுக்கு வடக்கும்
மற்றிதற்கு மேல் எல்லை
அற்றம் இல்லாக்
கொற்றன் புத்தூர் ஒடுமை
இருப்பைச் செய்யிடை மேல்தலைப்
பெருப்பிற்குக் கிழக்கும்
மற்றிதற்கு வடபால் எல்லை
காயலுள் கமலம் மலரும்
பாயலுள் வடபாலைப் பெருப்பிற்குத் தெற்கும்

## உரிமை

இவ்வியைத்த பெருநான்கு எல்லையில் பட்டபூமி
காராண்மை, மீயாட்சி
உள்ளடங்க மேல் எங்குரவரால் குடுக்கப்பட்ட
பரிசேய் எம்மாலும்
கொடுக்கப் பட்டது.

## ஆணத்தி மாறங்காரி

மற்றிதற்கு ஆணத்தி
குற்றமின்றிக் கூறுங்காலைக்
கொங்கரவ நறுங்கண்ணிக்
கங்கராஜனது கந்யா ரத்னம்



கொங்கர் கோற்குக் குணந்து கொடுப்ப
ஆர்ப்பரு அடல்தானைப்
பூர்வராஜர் புகன்றெழுந்து
வில்விரவும் கடல்தானை
வல்லவனை வெண்பைவாய்
ஆள் அமருள் அழிந்தோட
வாள் அமருள் உடன்வவ்விய
ஏனப்பொறி இகல் அமருள் இடியுரும் என வலனேந்தி
மலைத்த தானை மதவிகலன் மன்னர்கோன் அருளிற்-
பெற்றும்
கொல்வளைக்கும் வேல்தானைப்
பல்வளைக் கோன் குணரப்பட்டு
பொரவந்தவர் மதம் தவிர்க்கும்
கரவந்த புரத்தவர் குலத்தோன்றல்
மாவேந்துங் கடல் தானை
மூவேந்த மங்கலப் பேரரையனுகிய
வைத்ய சிகாமணி மாறங்காரி

## பங்கீடும் சாசனம் எழுதுதலும்

இப்பிரமதேயம் உடைய கொற்கைகிழான் காமக்காணி
சுவரன் சிங்கன்
இதனுள் மூன்றில் ஒன்றுந் தனக்கு வைத்து-
இரண்டு கூறும் ஐம்பதினவர்
ப்ராஹ்மணர்க் குநீரோடு அட்டிக் கொடுத்தான்
இதனுள் மூர்த்தி எயினன் சவையோடு ஒத்தது
நான்கரைப் படாகாரம் உடையன
இதனுள் தனக்கு வைத்த ஒரு கூற்றிலும் தம்பிமார்க்கு
நான்கும், தம்சிற்றப்பனுர் மக்களுக்கு ஆறும்
சபையோடு ஒத்த படாகாரம் கொடுத்தான்
இப்பிரசஸ்தி பாடின சேனுபதி ஏனுதி ஆயின சாத்தஞ்
சாத்தற்கு மூன்று கூற்ருருமாய்த் தங்களோடு
ஒத்த நான்கு படாகாரம் கொடுத்தார்
"மற்றிதனைக் காத்தார் மலரடி என்முடிமேல" என்று
கொற்றவனே பணித் தருளித் தெற்றெனத்

தாம்ர சாசனஞ் செய்வித்தான்
இய்து எழுதின சுத்த கேசரிப் பெரும்பணைக்காரனுக்கு
பெருமக்கள் அருளாற் பெற்றது ஒரு
இல்ல வளாவும் இரண்டுமாச் செய்யும்
ஒரு புன்செய்யும் பெற்றான்
இவை யுத்த கேசரிப் பெரும்பணைக்காரன் எழுத்து.

## மேற்கோள் நூல்கள்


1. அகநானூறு
2. இறையனார் களவியலுரை
3. கல்லாடம்
4. கல்வெட்டுக்கள் - இர. பன்னீர் செல்வம்
5. கொங்குதேச ராசாக்கள் சரிதம்
6. சிலப்பதிகாரம்
7. செந்தலைக் கல் வெட்டுக்கள்
8. தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் - ஐ. மகாதேவன்
9. தனிப்பாடல் திரட்டு - கழக வெளியீடு
10. திருக்குறள்
11. தேவாரம்
12. நற்றிணை
13. பட்டினப் பாலை
14. பதிற்றுப் பத்து
15. பல்லவர் செப்பேடுகள் முப்பது
16. புலவர் புராணம்
17. புற நானூறு
18. பெரிய புராணம்
19. யாப்பருங்கலக் காரிகை
20. Historical Grammar of Old Kannada [H. G. O. K.]
21. South Indian Inserrptions [S.I. I.]
22. Travancore Archaeological Series [T.A.S.]